


ச. அமிர்தநாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு

— கவிதைகள் —

ஆக்கியோன் :
ச. அமிர்தநாதர் S. Amirtanatan

275524

275524

வெளியிடுவோர்: விற்பனையுரிமையுடையோர்:
எஸ். ஏ. பெர்னண்டோ
ஸ்தாபனத்தார்
நுவரெலியா.

VIJAYALUCKSHMI BOOK DEPOT
248, Galle Road,
WELLAWATTE
T/PHONE 88930.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம் :-

என்னுடல் பேணிக்காத்து
இனியமுதறி வளித்துக்
கன்னலின் சுவைத்தமிழில்
கவிதைகள் இசைக்க வைத்துப்
பின்னு மென் நலனையெல்லாம்
பெருதுவந் திருக்கும் அன்பு
அன்னையே! அப்பா! இந்நூல்
அளித்தனன் உமக்கு, உம்மைந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு: 1965

படிகள்: 1000

உரிமை ஆசிரியருக்கே.

அச்சுப் பதிவு:-

ஐலண்ட் அச்சகம்

126, புதுச்செட்டித் தெரு, கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

கவிதை எனக்கு இன்பம். இவ்வின்பத்தைப் பிறரும் துய்த்தல் வேண்டும் என்று எனதுள்ளம் விழைந்தது. அதன் பயனே இக்கவிதை மலர் :

'' தமிழ் கூறும் நல்லுலகு இந்நூலின் குற்றங் களைந்து குணமறிந்து கொள்ளும் '' என்பது எனது நம்பிக்கை.

இந்நூலை மனமுவந்து வெளியிட்டு விற்பனையுரிமை ஏற்றவராகிய திரு. ஜோண் டி' குருஸ் அவர்களுக்கு என் நன்றி.

அணிந்துரை நல்கி ஆசி அளித்தவராகிய பெருந்தகை வித்துவான் க. வேந்தனார் அவர்களுக்கும் என் நன்றி உரியதாகுக :

ச. அமிர்தநாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேசுவரக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்
வித்துவான், பண்டிதர் சைவப்புலவர்
க. வேந்தனார் அவர்கள்

## நல்கிய அணிந்துரை

இன்பத்தமிழின் இனிமை நலம்
இதுதானென்று யாமுணரப்
பொன்புக் குலவும் புத்தொளிபோற்
புலமைச் செவ்வி பொலிந்தூறி
அன்புச் சாயல் நிழலாட
அமிர்தநாதர் எனும் இளைஞன்
என்புந் தமிழாய் நின்றுருகி
ஈந்தான் அழகுக் கவியமுதம் :

பழகு தமிழால் பொருள் மரபின்
பண்புவாழப் படைத்தெமக்கோர்
அழகுக் கவிதைப் புதுப் பனுவல்
அமிர்தநாத ரளித்தன னுல்
விழவும் விருந்தும் செய்திவரை
மேலும் மேலும் ஊக்கி யருள்
தழுவும் தெய்வத் தமிழ்த் தாயின்
தவமே என்று சாற்றிடுவேம் :

க. வேந்தனார்

8, கலைச்சோலை
கந்தர் மடம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

### அழகு

1. இன்பம் அளிப்பவா!
2. தமிழ்
3. தமிழ்க் கலையே!
4. மலர்கள்
5. தென்றல்
6. கடற்கரை
7. அழகுப் பெண்
8. அன்னம்
9. என்னை அழைத்தாள்!
10. குறிஞ்சி மகள்
11. மலை நாடு

### சமூகம்

12. ஏனோ அச்சம்?
13. சிரிக்கும் எழிலே!
14. மனம்
15. ஆய்ந்து சொல்வீர்!
16. சாவை வெல்வோம்!
17. அறிவுக்கு
18. கடவுளும் மனிதனும்
19. வென்றானா?
20. அம்மா!
21. வயது
22. ஒற்றுமை
23. குழந்தையாய் இருந்தால்!......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. என்ன குணம்?
25. தாவணியைக் கண்டாள்!
26. அன்பு
27. அறிஞரும் படகோட்டியும்
28. பெண் அழகு
29. அறிவு காண்போம்!
30. உயர்ந்திடுவோம்!
31. திருந்திய நல்லாள்
32. மலர்ந்திடாய் புதிய ஆண்டே!
33. கருகிய மொட்டு
34. சோமசுந்தரனார்
35. சுவாமி ஞானப்பிரகாசர்
36. விபுலானந்த அடிகள்
37. வீரமாமுனிவர்
38. புலமைச் சக்தி

வாழ்த்து

39. நல்லாசி அருள்வாய் பாலா!
40. பாதமலர் தஞ்சம்
41. அன்னைமரி கண்மணியே!
42. கருணை நாதா!
43. உலகுக்குயிர் ஈந்தோய்!
44. உயிர்த்தெழுந்தார்!
45. மரியே வாழ்க!
46. தாவீது குலக் கொழுந்தே!
47. பாப்பு வாழ்க!
48. தாய்மை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1 இன்பம் அளிப்பவா!

வானத்திலே கவின் காட்சி அமைத்தவா!
வையத்திலே பெரும் விந்தை சமைத்தவா!
மோன நிலையில் இருந்தே உயிர்களை
மேய்த்து இயக்கும் பரம்பொருளானவா!

வித்துக்குள்ளே நல்விருட்சம் சமைத்தவா!
விரிமலர் காய்கனி அதற்குள் அமைத்தவா!
தத்தித்திரியும் பறவையை முட்டையுள்
தங்கிட வைத்தவா! வாழ்வு கொடுப்பவா!

ஆண்பெண் வழியாய் உயிர் தோன்றச்செய்தவா!
ஆயிரமாயிரம் சீவனைக்காப்பவா!
மாண்டு மடிந்திட மீண்டும் புதிதாக
வையத்திலே உயிர் தோன்றிடச் செய்பவா!

முத்தினைச் சிப்பியுள் மூடியே வைத்தவா!
முக்கனிக்குள்ளே இனிமையைத்தந்தவா!
தித்திக்கும் தேனை மலர்க்குள் அமைத்ததைத்
தேடியே சேர்த்திட வண்டினங் கண்டவா!

மானிடர்க்கு நல்லறிவை அளித்தவா!
வாழ்வு மலர்ந்திட அன்பைக்கொடுத்தவா!
கானில் அலையும் உயிரினம் யாவிற்கும்
கல்லினுள் தேரைக்கும் தீனி கொடுப்பவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ண மலரினுள் வாசத்தை வைத்தவா!
　　வான்மழையாற் புவிவளம் பெறச்செய்பவா!
சின்னப்பறவைகள் ஓசையில் இன்னிசை
　　சேர்த்துச் செவிநுகர் இன்பம் அளிப்பவா!

எத்தனேயோ எழில் வண்ணங்கள்! யாவையும்
　　இயற்கை மடியில் தவழ்ந்திட விட்டவா!
அத்தனே யழகும் அருந்திக் களித்திட
　　அமுதவிழி வழி உணர்வை அளித்தவா!

கற்பனைக் கெட்டாத அற்புத வல்லவா!
　　காதலே எல்லா உயிர்க்குள்ளும் வைத்தவா!
சொற்கள் கடந்து துலங்கிடும் மாட்சிமைச்
　　சோதிப் பிழம்பாஞய் பாலித்தருளுவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 தமிழ்

அழகு மேவும் தமிழே!—இன்ப
அமுதமூறும் சுவையே!
பழகு கலைகள் மலிந்த — எழிற்
பாவாய் நீடு வாழி!

தெய்வத்தன்மை இனிமை — ஒருங்கே
சேர்ந்திலங்கும் செல்வி!
உய்ய வழியும் அறிவும் — ஈந்து
உயிரை ஓம்பும் அன்னை!

இயலும் இசையும் தழுவி — ஆடும்
இனிய புலமைச்செல்வி!
கயலும் வில்லும் புலியும் — உடையோர்
காத்து வளர்த்த திருவே!

சங்கத் திருந்து வாழ்ந்து — தூய
தங்கமாக ஒளிர்ந்து,
பொங்கு புகழில் தோய்ந்தாய்! — இளமை
பொழியப் பொலியும் கன்னி!

நிதியாம் புலமைச்செழுமை — நன்கு
நிறைந்த அமுத ஊற்றே!
கதியாம் தமிழர்க் கென்றும் — அவர்
கருதும் பேறே வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் வீரம் செறிந்த — நல்ல
காவியஞ் சேர் எழிலாள்!
சாதல் மூத்தல் காணுப் — புகழ்
தாங்கும் அறிவு நங்கை!

தெள்ளு தமிழின் சுவையாம் — அது
தேவாமிர்த மன்றே!
அள்ளி உண்டு மகிழ — நெஞ்சில்
ஆவல் பொங்குதம்மா!

சீர்த்த நாகரிகம் — ஈந்து
செழுமை பூக்கும் குணத்தாள்!
பார்த்து உலகோர் போற்றும் — நல்ல
பண்பு ஏந்தும் பாவை!

அறிவில் உறையும் தமிழே! — எங்கள்
ஆவியன்னாய் வாழி!
கவிதைப் பொருளே! சிறப்பே! — அறிவுக்
கலையே! நிலவே! வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 தமிழ்க் கலையே!

தெய்வீக நறுமணமும் தீந்தமிழினிமையும்
சேர்ந்தொளிரும் தமிழ்க்கலையே!
எய்திய எழிலுக்கு எழிலூட்டும் வண்ணமாய்
இலங்கிடும் தமிழ்க்கலையே!

பழகப் பழகிடப் பாகாய் இனித்திடும்
பைந்தமிழ் ஈந்த கலையே!
பழமையும் புதுமையும் களிநடம் புரிந்திடும்
பண்புடைத் தமிழர் கலையே!

மாற்றுயர்ந்த பொன்னிலே மாண்புடைத்
வடித்தெடுத்த தமிழ்க் கலையே! [தமிழரினம்
வையத்தின் இன்பமும் வானத்தினின்பமும்
வாரிக் கொடுக்குங் கலையே!

வாழ்வாங்கு வாழும் வழியாவுமீந்திடும்
வண்மைத் தமிழ்க் கலையே!
வரம்பின்றிப் பொருள் யாவும் வழங்கியும்
வாழுந் தமிழ்க் கலையே! [பொன்ருது

தேன்பாய்ந்து செய்யபொருள் செகம்பாய்ந்து
செழித்திடும் செந்தமிழார் கலையே!
ஊன்பாய்ந்து உளம்பாய்ந்து உணர்வோடு கலந்திடும்
உயர்தமிழ்ச் செழுங்கலையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கும் புகழால் உலகாண்ட தமிழரினம்
ஓம்பிய தமிழ்க் கலையே!
தாங்கும் சிறப்பால் தரணியில் நிகரற்றுத்
தனிச் சிறப்புற்ற கலையே!

காலத்தை வென்று கவின்எழில் பூத்திலங்கும்
கன்னித் தமிழ்க் கலையே!
கற்பவர் யாரையும் கவர்ந்தடிமை கொண்டிடும்
கவின் நிறை தமிழ்க் கலையே!

அறத்தோடு பொருள் இன்பம் யாவையும் சிறப்புற
அளிக்கின்ற தமிழ்க் கலையே!
அறிவிலே தோய்ந்துபிற அழகெல்லாம் விஞ்சிஒளிர்
அற்புதத் தமிழ்க் கலையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 மலர்கள்

விண்ணிலே கண் சிமிட்டும் — எழில்
வெள்ளிக் கூட்டங்கள் போல்
மண்ணில் மலரினங்காள்! — உமக்கிவ்
வடிவை ஈந்தவரார்!

ஆதவனை மயக்கி — அவன்
அழகு நிற மனைத்தும்; உங்கள்
மீதில் சுமந்தொளிரும் — அந்த
விந்தை புதுமையன்றோ!

பருவ மங்கையர்கள் — உம்மழகைப்
பார்த்து ஏங்குகிறார்; அவர்
முறுவலிப்பின் எழில் — உமக்கு
முழுதும் சொந்தமாமோ!

கண்கள் இரண்டிருந்தும் — வடிவு
காணப்போதா தென்றோ
பெண்கள் உம்நிறத்தை — உடையில்
பெரிதும் விரும்புகின்றார்!

மலர்ந்து மலர்ந்து மணம் — அள்ளி
வாரிச் சொரிந்து; பின்பு
சுருங்கி விழுந்திறப்பீர்! — நிலையாமை
சொல்லுந் தன்மை இதோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்து அழகுமிழ்ந்து — தேன்
சிந்தி வண்டினத்தை
வரித்து அழைப்பதுவும் — உங்காதல்
வாழ்வும் நாமறி வோம் :

பூவில் எழில் கூட்டும் — நல்ல
புது மலரினங்காள் !
பாவில் உம்சிறப்பை — ஏற்றிப்
பாடின் மணங்கமழும் :

ஆசைப் பொருளாவீர் — யாவர்க்கும்
அன்புப் பரிசாவீர் ; இறைவன்
பூசைப் பொருளாவீர் ! — உங்கள்
புனிதத் தன்மையினல் !

உயர்ந்த பண்புடைய — மலர்காள் !
உம்போல் எம்மனதைச்
சிறத்த மலராக்கின் — அது
தேவர்க் குவப்பா மன்றோ !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 தென்றல்

கொங்கலர் சோலை புகுந்து மலரினம்
　　குலவி மகிழ்ந்திடும் தென்றலே; நீ
அங்கங்கே சென்று மணஞ்சேர்ப்பதேன்; எம்போல்
　　அறிவை வளர்க்கவோ சொல்லுவாய்!

நதியில் குளித்தும் கடலில் தவழ்ந்தும், நீ
　　நன்ருக நர்த்தனம் ஆடுகிருய்;
புவியில் நீ செல்லா இடமில்லைத் தென்றலே
　　புதினங்கள் என்னென்ன சொல்லுவாய்!

வெப்பத்திற் கேற்ற மருந் தென எண்ணி
　　விரும்புகிருர் உன்னை மாந்தர்கள்: நீ
தப்பாது இன்சுகம் செய்தும் அவரிடம்
　　சன்மானம் வாங்காயோ? தொண்டனே!

வாலைக் குமரியர் ஆடை தொட்டுப் பல
　　வம்புகள் செய்து மகிழ்கிருய்: இது
சாலப் பொருந்தாத செய்கை, என்ருலும்
　　தடுப்பார் உன்னை இங்கு யாருள்ளார்?

தாலாட்டுப் பாடித் துயில் உறக்கு மிந்தத்
　　தாய்மைக் குணத்தினைத் தந்தார் யார்? உன்
கோலக் குறும்புகள் கூறின் அடங்கு மோ?
　　கொஞ்சி உலாவிடும் தென்றலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யன்னல் வழியாக உள்ளே புகுந்து நீ
இரகசியம் யாவையும் கேட்கிறாய்: சீ!
என்ன குணமிது! ஏதும் அழைப்பின்றி
எப்படி ஏகுவாய் தென்றலே!

தென்னையின் கீற்றினில் சிட்டுக் குருவியைச்
சேர்த்து நன்றாய் ஊஞ்சல் ஆட்டுகிறாய்:
பின்னும் திரிந்து தடாகத்தில் நீந்திப்
புதுமலர் ஆட்டிக் களிக்கின்றாய்!

இன்னிசை பாடி மணம் பரப்பி வீசும்
இனிய தமிழ் சாரும் தென்றலே! நீ
ஏழிசை யாழின் சுதி கூட்டிப் பாடிட
எங்கிருந்து கற்றாய் கூறுவாய்!

பொங்கி யெழுந்து கடலலை மோதிடப்
புயலாய் நீ மாறாதே தென்றலே
இங்கிருக்கு மெழில் எல்லாஞ் சிதைந்திடும்:
ஏசு வார் மக்கள் உன்னை:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 கடற் கரை

வெள்ளி மணலைத் தழுவ அலைகள்
விரைந்து பாயுது!
பள்ளிச் சிறுவர் போல வந்தும்
துள்ளிக் குதிக்குது:

அந்தி அழகு காண மக்கள்
வந்து கூடுறர்:
சிந்தை மகிழ்ந்து சிரித்துலாவி
இன்பம் மாந்திறர்:

பட்டு மணலில் நண்டுக் கூட்டம்
பதுங்கி ஊர்ந்திடும்:
கட்டு மரத்தில் இருந்து புட்கள்
கானம் இசைத்திடும்:

தென்றல் தழுவக் கடலின் மேனி
சிலிர்த்துத் தோன்றுது:
சிரித்து அலைகள் கரைக்கு வந்து
சேதி சொல்லுது:

மேலைக் கடலில் மூழ்கப் பரிதி
விரைந்து செல்லுது:
நீலக் கடலும் தங்க ஒளியைத்தன்
மேலில் போர்க் குது:



UNIVERSITY OF CEYLON

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிச்சிறுவர் மண்ணளைந்து
வீடு கட்டுவார்!
ஓடம் விட்டு நீர் ஆழம் பார்த்து
உள்ளம் மகிழுவார்!

காதலர்கள் சோடி சேர்ந்து
காற்று ஆடுவார்
கடலைப் புணரும் மூலைவானம்
கண்டு நாணுவார்!

கனிந்த மாலை அழகு நிறைந்து
கருத்தை மயக்கிடும்:
கடற் கரையின் அழகவ் வேளை
கவிதை யீந்திடும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7 அழகுப் பெண்

வாழைக் குருத்தில் நிலவொளி கொஞ்சிடும்
வேளையில்: அந்த
வாலைக் குமரி அக்காட்சியைக் காட்டி
மயக்கிருள்!
நீலக்கடல் வானம் நீந்தும் சுடர்தனில்
தோன்றுவாள்! என்
நெஞ்சத்தைக் கண்ணில் புதைத்துப் பெரு
இன்பம் ஈகுவாள்!

பூத்துக் குலுங்கும் மலர்க்கொடியில் நின்று
ஆடுவாள்! மலர்ப்
பொய்கையில் அன்னமாய் நீந்தித் திரிந்தும்
புரளுவாள்! காலை
காத்துக் கிடந் தெழும் புட்களின் அழகு
வண்ணத்தை; எந்தன்
கருத்தினுக் காக்கி அவற்றின் இசை மீட்டிப்
பாடுவாள்!

காலைப் பரிதியின் சோதிப் பிழம்பு
விரைந் தேகிக்; கீழ்
கடலை ஒளிக்குள மாக்கிடும் காட்சியில்
முழ்குவாள்! அவன்
ஆரத் தழுவிக் குலவிடும் தாமரை நங்கை
அழகெல்லாம்
அற்புதம்! அற்புதம்! யாவும் அவளின்
அழகாமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றல் தழுவ மலரும் நறுந்தேன்
மலர் எழில்; அவள்
சிந்தும் புதுப்புன்னகை என்று சொல்லவே
தோணுமே!
அந்தி மயக்கில் அழகுக் கொழுந்தாகும்
மேகங்கள்; அந்த
அழகென்னும் கோமள வல்லி களைத்திட்ட
ஆடை யோ!

கோடி கோடிமுறை பாவலர் நெஞ்சத்தைத்
தொட்டவள்: இங்கு
கொஞ்சி மகிழ்ந்திட இன்னும் பலரை
அழைக்கிருள்!
பாடி மகிழ்வதும் பார்த்து இரசிப்பதும்
இன்பமாம்! அவள்
பழக இனித்திடும் பண்புடைய எழிற்
பாவை யே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8 அன்னம்

பொய்கையில் நீந்திக் களித்துப்பின் தாமரைப்
பூவில் அமர்ந்திருப்பாய்!
வெய்யோன் மறைந்ததும் தாமரை மூடின்
வெளிவர என்ன செய்வாய்!

கலையுள்ளம் கொண்ட புலவர்கள் உன்னையேன்
காவியத்தில் அமைத்தார்!
காதல் நம்பியர்க்குத் தூது சொல்லும் விதம்
கற்றது எங்கிருந் தோ!

அன்ன நடை! அதுவே சிறப்பென்பார்
அத்தனை நங்கையரும்!
கன்னியர்க்காகிய இந்நடை யார் சொந்தம்
கற்பது யார் யாரிடம்?

பால் உண்பாய் நீர் நீக்கி என்றறைகின்றனர்
பழந்தமிழ் நூல்களிலே
சாலுமாம் இப்பண்பு கல்வியில் எமக்கென்று
சாற்றினர் நல்லறிஞர்!

தென்றல் தழுவத் திரையெழுந் தாலாட்டத்
தேன் வண்டினம் இசைப்ப
நன்று நீ பொய்கை மலரில் உறங்கினல்
நாமகள் எங்கிருப்பாள்! 275524



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்கதை கூறும் சுவையான செய்யுட்கள்
ஒன்றும் நாம் விட்டுவையோம்!
என்றும் இனிக்கு மழகுடை அன்னமே!
என்னே! உந்தன் சிறப்பு!

சதிபதியாய்க் கூடித் தாமரைப் போதினை
சார்ந்து சுற்றும் காட்சி
புதிய தம்பதிகள் தீ வலம் செய்கிறார்
போலும் எனத் தோணுமே!

அறிவிற்கும் தூய்மைக்கும் நீயே பொருளென்பார்
அழகிற்கும் நீயே என்பேன்!
"அருமறை ஓதினர் அன்னமாய்" என்பார்கள்
அவையாவும் உன்சிறப்பே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9 என்னை அழைத்தாள்!

என்னை அழைத்தாள் இயற்கைத்தாய் — நான்
ஏனென்று கேளாது பின்சென்றேன்:
"தன்னெழில் வண்ணங்கள் பார்" என்றாள்—மனம்
தாவிப்பறந்தது தழகுண்ண:

தேன்மலர்ச் சோலைகள் காட்டினாள் — அந்தி
சிந்திடும் காட்சியும், பொய்கையும், வான்
மீனினம் செய்கின்ற விந்தையும் — கோடி
விதம் விதம் பார்த்து மகிழ்ந்திட்டேன்:

நீலக்கடல் அலை வந்தங்கு — கொஞ்சி
நிற்கும் கடற்கரைத் தோற்றமும்
மாலைப் பரிதி கடலினுள் — மூழ்கி
மகிழும் வனப்பும் அமுதமாம்!

வட்ட நிலாவைப் பிடித்திட — மந்தி
வாகாய் முனைந்து முனைந்து, பின்
இட்டாததால் மனம் நொந்துபோய் — மரக்
கிளைகளைத் தாவியங்காடுமே!

வானுங் கடலும் இணைந்தின்ப — முத்தம்
மாறியளிப்பதும் நான் கண்டேன்:
தேனும் மணமும் நிறைந்தபூ — அதைத்
தென்றல் அணைத்து மகிழ்ந்ததே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சாடு மலைமேலிருந்து நீர் — பாலாய்
வழிந்தோடப் பூமி சிலிர்த்திட
அஞ்சிடும் மான்கூட்டம் வந்துநீர் — நன்கு
அருந்திக்களிப்பதை என்னென்பேன்!

படரும் மலர்க்கொடி மீதிலே — நிலா
பாய்ச்சும் ஒளிகண்டு சொக்கினேன்!
தொடரும் அழகு! மலை, நதி: — கடல்
துள்ளிடும் மீனினம் கண்ணுற்றேன்:

சிட்டுக் குருவியின் பட்டுடல் — அதைச்
சேர்த்து அணைத்தது ஆண் ஒன்று:
கொட்டியதின்பம்: அதைப் பார்த்துப் — புரு
கொஞ்சி மகிழ்ந்த(து) துணையுடன்:

வண்ணமயில் நடம் ஆடிடும் — குயில்
வந்து இசையமு தீந்திடும்:
எண்ண இனித்திடும் காட்சிகள் — எழில்
எத்தனை! எத்தனை! கோடியோ!

இத்தனை இன்ப எழில்யாவும் — தாயே!
ஈந்தவர் யாரென்று நான் கேட்டேன்!
“அத்தனையும் ஈசன் கைவண்ணம்” — என்று
அன்னை இயற்கை அறைந்திட்டாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 குறிஞ்சி மகள்

சோலையிலே மலரினங்கள் சிரிக்கும்: வண்டு
சொக்கி விழும் உறவாடித் தேன் சுவைக்கும்:
மாலையிலே எழில் மஞ்சு வனப்பை ஏற்றும்!
மலைமுகடு செங்கதிரால் வயிரமாகும்:
காலையிலே இளம்பரிதிக் கோலங் காணக்
கண்ணிரெண்டும் போதாது; அழகின் பிம்பம்
மூலையிலே காதல்செய்யும் பறவைக்கூட்டம்; இம்
முழுவனப்பும் குறிஞ்சி மகட் கியற்கை ஈந்தாள்!

கொஞ்சுகின்ற மஞ்சினத்தைப் பிரித்து; அந்தக்
குளிர் நிலவாள் அழகுமுகம் காட்டல்போல
விஞ்சுகின்ற எழில்மேனி காட்டிக் காட்டி
வேதனையைக் காளை நெஞ்சில் விதைப்பாள்; இந்த
அஞ்சுகத்தாள்! குறிஞ்சி எனும் அழகுப்பெண்ணாள்:
அவள் வடிவோ காவியத்தில் கவிஞர் நெஞ்சில்
கொஞ்சி நிற்கும்: குடியிருக்கும்: கோடி கோடி
கொடுத்தாலும் பெறுமதிதான் கூறலாமோ?

தென்றல் வந்து அவள்மேனி தழுவும்! காதல்
திரைமறைவில் நடந்துவிடும்: அழகு பூக்கும்:
நின்று நின்று சிரித்திடுவாள், உளம் மயங்கும்:!
நினைத்துவிட்டால் அவள்வடிவைக் காதல்மேவும்
குன்றெனவே அசையாத முனிவர் நெஞ்சும்
குலுங்கிவிடும் வியப்பெய்தும்: கொள்ளை இன்பம்
அன்றலர்ந்த புதுமலராள்! அற்புதத்தாள்,
அவள்குமரி! நிலமகளின் அழகுப்பிள்ளை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11 மலை நாடு

பொங்கருவி தொங்கி விழும் மலைகள்
பொழில் தோறும் புன்னகைசெய் மலர்கள்;
தங்கியுறவாடும் செழுங்குன்று: இன்பம் [மஞ்சு
தழுவ உணர்வூட்டும் குளிர்த் தென்றல்:
எங்கிருந்தும் பரவி வரும் பசுமை:
இயற்கையன்னை முறுவலிப்பின் மாட்சி
இங்கிதமாம் இனிமையுமாம் யாவும்
எழில் புதைந்த ஈழமலை நாட்டில்!

வழிதோறும் மரஞ்செடிகள்: கதிரோன்
வனப்பினிலே மலையகமும் தோய்ந்து
எழிலூற்றாய் அளிக்கின்ற கோலம்
எண்ணமதில் கொள்ளை இன்பமீயும்
விழியுணவாய் அமையும் அந்த அழகு:
விரிந்தோடும் நதி எழிலோடாடும்:
களிகொள்ளும் கவிதையுள்ளம், தாவும்
கற்பனையும் அற்புதமாய்ப் பொங்கும்:

இயலிசையில் தோய்ந்து நடம்புரியும்
இனிமைத்தமிழ்க் கலையுணர்த்தும் காட்சி:
அயல் நாட்டார் புகழ்கின்ற அழகு
அற்புதந்தான், பெருமையுந்தான் எமக்கு:
கலை வளரும் கவிதைபல மலரும்
காண்பவர்கள் கருத்திழப்பர்: நாட்டின்
நிதி பெருக்கும் மலையகத்தின் தோற்றம்
நெஞ்சில் நீங்காது நினைவோடு கலக்கும்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 ஏனோ அச்சம்?

வீட்டுக்குப் பூட்டிட்டான் மனிதன் ஏனோ?
விலங்கினங்கள் களவுசெய்ய வருமோ? இல்லை:
நாட்டுக்குப் படையை வைத்துப் பாதுகாத்து
நடைவீதி யெலாங் காவல் வைத்தான்: பண
நோட்டங்கண்டு பதுக்கி வைத்துப் பூசை செய்வான்:
நொடிப்பொழுதும் அச்சமின்றி இருக்க மாட்டான்;
பாட்டுக்குள் இதன் கருத்தைப் பாரீர்! அந்தோ!
பயந்து விட்டான் மனிதனுக்கு மனிதன் பூவில்;

கொல்லுகின்ற மிருகங்கள் கோடி கோடி
கொடுமை செய்யும் செந்துக்கள் பல இருந்தும்
அல்லல் செய்யும் நோய் பஞ்சம் அழிவுகட்கும்
அவ்வளவு மிகப்பயந்து வாழ்வதில்லை:
இல்லைப்பயம் மனிதனுக்கு இவற்றின்மீது
ஏனோ இவன் தன்னினத்திற் கஞ்சுகிறன்;
தொல்லைசெய்யும் விலங்கின்குணம் மனிதன்கொண்டான்
இத்துர்க்குணந்தான் நீங்கிவிடில் துன்பம் ஏது?

பொங்கியெழுங் கடற் பெருக்காற் சிலநாள் அச்சம்
புயற்காற்றல் பெருமழையால் சிலநாள் அச்சம்:
மிஞ்சியெழும் இடிமுழக்கம் மின்னலாலும்
மேதினியில் சிலமணியே அச்சம் என்பேன்
இங்கிருக்கும் மனிதருக்கு மனிதர் அஞ்சி
ஏங்குகிறர் காலமெல்லாம் என்ன வெட்கம்!
மங்கிவரும் மனிதகுலப் பண்பினலே, பயந்து
வாழ்கின்றார் இது இவர்க்கு மாண்போ சொல்வீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சுகிறன் மனிதனுக்கு மனிதனெனில்
ஆறறிவு பெற்றிருந்தும் பயன்தான் யாதோ?
கொஞ்சமேனும் மனிதஉள்ளம் கொண்டு வாழ்ந்தால்
கொடிய குணம் தீயசெயல், பகைதான் ஏது?
தஞ்சமுண்டு: ஏழைகட்கு உள்ளோர் ஈந்தால்
தரணியெங்கும் அன்பதனைப் படரவிட்டால்
விஞ்சிடுமோ விலங்கின்குணம்? வீழ்ந்தழியும்
விரிந்துவரும் சமாதானம்: உலகம் வாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 சிரிக்கும் எழிலே!

கோடிமலர்கள் அழகு கண்டோம்
குழந்தாய் உனக்கு நிகராமோ?
பாடி மகிழும் அன்பு மலர்
பாரில் உனக்கே எழில் சொந்தம்!

பொன்னைப் புனைந்த முகவடிவும்
புதுமைச் சிறப்பும் தளிருடலும்
மின்னை நிகர்த்த புன் சிரிப்பும்
முழுதும் நினதாம்! சிறு குழந்தாய்!

அன்பால் விளைந்த கனியமுதே
அழகே! காதல் பூஞ்செண்டே!
உன்பால் மயங்கா உளம் உண்டேல்
உரைப்பாய்! ஒன்றும் யாமறியோம்:

மலர்ந்த பூவில் தேனொழுகும்
மறுநாள் வாடிக் காய்ந்துவிடும்:
அலர்ந்தும் மழலைத் தேன் பிலிற்றும்
அழகு மலர்நீ! என்னென்போம்:

குறும்பும் நகையும் புரிந்திடுவாய்
கொள்ளை இன்பம் ஈந்திடுவாய்!
அரும்பும் ஆசைப் பெருக்காலே
அள்ளி அணைப்பார் உனைமார்பில்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகப் பழக நீ இனிப்பாய்
பாலும் தேனும் தெவிட்டிவிடும் :
பழக இனிக்கும் தமிழ்க்கலேயோ !
பார்த்து மகிழும் பொன்மல ரோ!

உள்ளத் தூய்மை முகம் காட்டும்
ஒளிரும் அழகு இரு விழியில்
துள்ளும் மகிழ்ச்சி சூழ்ந்திருக்கும்
துயரை நீக்கும் புதுநிலவே !

இல்லம் மகிழ நீ இருப்பாய்
இறைவன் மகிழ்ந்து உனில் இருப்பார் :
செல்வம் நீயே ! பெற்ருேர்க்குச்
சிரிக்கும் எழிலே செழுங்கனியே !

காதல் வாழ்வு கனிந்தினிக்கும்
கவலேதிரும் சுகம் பெருகும்
தீதில்லாத உன் செயல்கள்
சிந்தைக் கின்பம் இன்பமன்ருே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14 மனம்

கடவுளை மிஞ்சும் ஓர்கால்
கவலையில் அவரைக் கெஞ்சும்:
உடலினை மறந்து எண்ண
உலகினில் சஞ்சரிக்கும்:

பணம் காணில் பாயும்: பின்பு
பதவியைத் தேடித்தாவும்:
குணம் பல மாறும்: துஞ்சும்
கொஞ்சமோ மனத்தின் கோலம்:

ஆசைமேல் ஆசை கொள்ளும்
அவைகிட்டா தெனில் வருந்தும்:
மோசத்தைச் செய்யும் எண்ணி
மெழுகென உருகும் என்னே!

போற்றிடும் மறுகணமே; அப்
புகழ்கண்டு பொருமை கொள்ளும்:
தூற்றிடும் வசைகள் பேசும்
சொன்னதை மறுக்கும் கண்முன்:

மகிழ்ந்திடும் ஆடும்: பின் போ
மல்கிடும் கண்ணீர், அன்பைத்
துறந்திடும் கோபம் கொள்ளும்
துச்சமாய் உயிரை எண்ணும்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணிலே கோட்டை கட்டும்
வீம்புகள் பேசும்: பின்பு
எண்ணிடும் தன் சிறுமை
ஏங்கிடும் பெருமூச்சிடும்:

அழகின்பின் ஊர்ந்து செல்லும்
அதைவிட்டுப் புகழ்க்கு ஓடும்
பழகிய பண்பைக் கொல்லும்
பாவமென்றுணர்ந்து வாடும்:

அன்பென்று சொல்லும் வாயால்
அடக்கிடும் நஞ்சை உள்ளே
இன்பமாய் முகமன் கூறும்
எள்ளியே நகைக்கும் பின்னுல்:

வீரியம் பேசும் பின்பு: விழுந்திடும்
நாணங் கொள்ளும்
காரியம் வெற்றி காணக்
கனவிலும் உலாவி மீளும்:

ஆயிரம் குணங்கொள் நெஞ்சே!
அரிது உன்னேடு வாழ்தல்
நீ மறைந் திருந்திட்டாலும்
நிம்மதி இல்லை! இல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15 ஆய்ந்து சொல்வீர்!

இலக்கியத்தில் பாலை நிலக் காட்சி: அதை
எண்ணிடவே அகங்குளிரும்; அன்பு மேவும்
இலக்கியத்தை ஈந்த தமிழ்ச் செல்வத்தாலே
எம் வாழ்வில் நற்பண்பு பூத்தால் போதும்:

கொதிக்கின்ற பாலைவனம் எனினும் அங்கு
குலவுகின்ற உயிரினத்தின் காதல் வாழ்வு
மதிக்கின்ற பண்புடனே மலர்ந்து எங்கள்
மனக்கதவைத் தட்டும் பெருவியப்பை யூட்டும்:

வெப்பத்தின் கொடுமையினுல் பெண்புரு: தன்
வேதனையை வெளிக்காட்டித் துடித்து வாடப்
பக்கத்தில் ஆண்புரு தன் சிறகை நீட்டிப்
பாங்காக நிழல் அளிக்கும்: பரிவு என்னே!

தாகத்தால் வாடிய தன் சிறு கன்றுக்குத்
தண்ணீரைத் முதலூட்டித் தன்பிடிக்கு மூட்டி
மீதமாய் உள்ள நீர் சிறிது உண்டு, தன்
மிடி தீர்க்கும் ஆண்யானைப் பண்பு பாரீர்!

நிழல் இன்றி உடல் வருந்திப் பெண்மான் நோக
நெஞ்சுருகித் தன் உடலால் நிழலை ஈந்து
தழலாக எரிகின்ற வெப்பத் திற்குத்
தன்னுடலை அளிக்கின்ற கலையும் உண்டு:

ஐயறிவு உயிரினத்தின் காதல் வாழ்வில்
அன் பொழுக்கம் தியாகமெல்லாம் இருக்கு
ஆறறிவு மனிதரிடம் இப்பண்புகள் [மாயின்
அருகி வரல் முறையாமோ? ஆய்ந்து சொல்வீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 சாவை வெல்வோம்!

சிறப்பான தொண்டதனுல்
மக்கள் உள்ளத்
திருவீட்டில் நுழைந்துவிட்ட
பெரியா ரெல்லாம்
இறப்புக்குப் பின்னுலும்
பூவில் வாழ்வார்
என்றென்றும் அவர்கள்புகழ்
இலங்கக் காண்போம்:

"இருந்தாலும் ஆயிரம்பொன்
யானை செத்து
இறந்தாலும் ஆயிரம்பொன்
என்பார்" என்றுல்
பருந்தாமோ? மக்கள்அலைந்
துண்டி றந்து
பயனற்று அழிவதற்குப்
பகரு வீரே!

கரும்பழிந்து சாருகும்
இனிமை யூறும்
கனியழிந்து இரசமாகும்
சந்தானமும்
இருந்த இடம் மணங்கமழும்
வாழை கனி,
ஈந்தழியும்: நாமிறந்தால்
என்ன ஆகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதவுடல் அழிந்திடினும்
காந்தி இன்றும்
புகழுடனே வாழ்கின்றார்
காலம் வென்று
சாதலின்றி நிலைத்திருப்பார்
நல்லோ ரெல்லாம்:
சரித்திரமே சான்றாகும்
தரணி யோர்க் கே!

முல்லைக்குத் தேரீந்த
பாரி: கொடையில்
முழுஇன்பம் கண்டிருந்த
கன்னன்: தலையை
இல்லையென ஈந்து நின்ற
குமணன், அவர்கள்
இன்றுந்தான் தமிழுடனே
இருக்கின்றா ரே!

சாவு: அது உயிர்களுக்கு
இருந்தும் அதைத்
தடுத்து நின்று வாழ்கின்றார்
தொண்டி னாலே
ஆவதெல்லாம் அழிவதென்ற
துண்மை! அந்த
அழிவுள்ளும் பயனீதல்
அறிவே! என்பேன்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனை உருக்கி மெழுகுவர்த்தி
ஒளியை ஈயும்;
சந்தணமும் மணங்கமழ்ந்து
சாம்பலாகும்:
பனிமலரின் தியாகமே அப்
பன்னீராகும்;
பார்த்திருக்கும் நாம் என்ன
பாருக் கீந்தோம்:

அன்பு கொண்டு அயலவரின்
துயர் களைந்து
அறிவு கண்டு வாழா தகந்தை
யோடு; மனிதப்
பண்பு என்னும் போர்வையின்றி
அம்மண மாய்ப்
பாரதனில் வாழ்ந்திறந்தால்
பழிசொல்லா ரோ!

வந்தவர்கள் எல்லோரும்
வழிப் போக்கர் கள்:
வருவதுவும் போவதுந் தான்
நியதி: பாரில்
இந்த உடல் அழிவதற்குள்
உலகம் வாழ
ஏற்ற பணி யாற்றி மக்கள்
இதயம் வாழ்வோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17 அறிவுக்கு

பறக்கும் போது மின்மினி
　　பளபளக்கும் தன்மைபோல்
உழைக்கும்போது மானிடர்
　　உயர்வு தோன்றும் பாரிலே!

இருளை எண்ணி நகைப்பதால்
　　ஏது நன்மை ஏற்படும்?
இருளை நீக்க முனைந்திடு
　　ஏற்றுதீபம்! அதுவேமேல்:

அன்பை எண்ணிப் பார்க்காமல்
　　அறிவால் வாழ முடியுமா?
பண்பை மறந்த பேர்களைப்
　　பதர்கள் என்போம், மனிதருள்:

பொன்னை அறிய உரைக்கல்லில்
　　போட்டுரைப்பார் நினைந்திடு:
உன்னைஅறிய உன்செயல்
　　உரைக்கல்லாக ஆகுமே!

பிறர்குறையை எண்ணி நீ
　　பேசுகின்ற போதினில்
பிறர் அறிவார் உன்குணம்,
　　பேசுமுன்னே நினை இதை:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு வாழ்க்கை தேர்ந்தபின்
யாரும் கேளீ ராகுவார்
இன்பம் பொங்கும் வாழ்க்கையில்
ஏது துன்பம்: தீமைகள்?

சுற்றுகின்ற உலகிது
துன்ப இன்பம் மாறிடும்:
கற்ற நல்ல பண்பினைக்
கடை பிடித்து ஒழுகிடு:

அகம் பாவத்தால் விளைவது
அதிக தோல்வி வாழ்க்கையில்
வெறும் பெருமை கொள்ளாதே
வெளுத்திடும் உன் சாயமும்:

மணம் நிறைந்த மலரன்றோ
மக்கள் விரும்பிச் சூடுவார்:
குணம் நிறைந்த பேர்களில்
கொள்வார் யாரும் பேரன்பு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 கடவுளும் மனிதனும்

*மனிதன் :—*

அன்புள்ள இறைவா! இங்கே
அறிவிலான் கேட்பேன், ஒன்றே!
இன்புறும் வண்ணம் எனக்
கீந்திடாய் இனிய பதில்:
துன்பத்தில் சுழன்று பட்ட
துயரமே தூண்டிற் றென்னை:
உன்பெருங் கருணையா லே
உலகினைப் புரக்கும் நல்லோய்!

மண்ணிலே தோன்றும் ஆசை
மாயையாய் உருவம் பெற்றுக்
கண்ணையும் மறைத்துப் புத்தி
கலக்குதே என்ன செய்வேன்!
உண்மையைக் கூறுகின்றேன்
ஒன்றன் பின் ஒன்றாய்த்துன்பம்
பின்னியே வருத்தவோ நான்
பிறந்திட்டேன்: உலகந்தன்னில்:

வாழ்க்கையோ பெரிய தொல்லை
மனிதர்கள் குணங்கள் கோடி;
ஆக்கமுமில்லை, அன்பின்
அரவணைப் பில்லை, இங்கு
தீக்குணம் மிகுந்ததாலே
செய்கையில் உண்மையில்லை:
போக்கிடமின்றித் துன்பப்
புனலிலே மூழ்கின்றேனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசத்தை என்னுள் கொண்ட
 படியினுல் விளைந்த துன்பம்
ஆசையால் விளையுந் துன்பம்
 ஆயிரம்! அறையிற் போமோ!
நேசத்தை அறியார் செய்கை
 நெஞ்சற்ருர் செய்கையெல்லாம்
மோசத்தை விளைத்து வாழ்வின்
 முழுமையைக் குறைக்குதையோ!

மனமொரு நிலையிலில்லை
 மானிடக்குணங்கள் வந்து
கணம் ஒன்ருய் வருத்தும்
 கயமைகள் யாவும் சேர்ந்து
குணமதைக் கெடுக்கும்: இங்கோ
 கொஞ்சமும் அமைதியில்லை
தினமொரு எண்ணம் வந்து
 திருப்புதே என் வழியை:

வஞ்சனை சூது கோபம்
 வகைக் கொன்ருய் இருக்குதிங்கே!
நஞ்சினை மனதில் கொண்டார்
 யார் யாரென்றறிதல் தொல்லை
பஞ்சிலே நெருப்பாய் நோயும்
 பற்றியே உடலை மாய்க்கப்
பிஞ்சிலே இருந்த சுகம்
 பிரிந்திட வருந்திறேனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை ஏமாற்றங்கள்!
வாழ்க்கையில்: எண்ணில் கோடி:
எத்தனை பொய்த் தோற்றங்கள்
ஏய்ப்பன தீய வழி:
எத்தனை பொறுப்பு இங்கே!
இன்பமும் சுகமும் கிட்டா;
இத்தனை மத்தியிலும், இங்கே
எப்படி நல்லாய் வாழ்வேன்!

கடவுள்:—

துன்பத்தில் சுழன்று பட்ட
துயர்யாவும் கேட்டேன்: மைந்த!
துன்பமாம் தீயில் வெந்து
சுடர் செய்வாய் தங்கமாக!
மன்பதைக் குரிய பண்பும்
வயங்கிடும்! துன்பந்தன்னில்
என்று நல்லறிஞர் கூறும்
இன்னுரை மனதில் கொள்வாய்!

தண்ணீரைக் கிழித்துக் கொண்டு
தாமரை நீர்மேல் வந்து
கண்ணிறை அழகை யீயும்
காட்சியைப் பாராய் தம்பி!
தண்ணீரில் அமிழ்ந்தி அது
சாகாது: துன்ப மென்னும்
இந்நீரை நீ கிழித்து
இலங்குவாய் பண்பு ஓங்க:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேற்றினில் தாமரையும்
    தேவர்க்கும் பூசைக்காகும்:
ஊற்றுநீர் நல் நீராஞல்
    உலகமும் வாழுமன்ருே!
சாற்றிடும் துன்ப மெல்லாம்
    தகர்க்குமோ நல்லுள்ளத்தை!
மாற்றிடு துயரமெல்லாம்
    மனமதை மலராய் ஆக்கு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 வென்ருஞ?

இயற்கையை மனிதன் வென்ருஞ?
இல்லை, இல்லை, இது உண்மை:
இயற்கையைத் தோழமை கொண்டறிவால்
எல்லா வளமும் பெறுகின்ருன்:

காற்றை மழையைத் தடைசெய்யக்
கடந்த இளமை திரும்பிவர
மாற்ற இயற்கை நியதிகளை
மனிதன் தன்ஞல் ஆகுவதோ?

விளங்கி இயற்கை நுட்பங்களை
விரும்பி அறிவு துணைக்கொண்டு
வழங்கி வாழ்க்கை வசதிகளை
வையமதிலே வாழ்கின்ருன்:

காற்றின் திசையே கலம் விடுவான்:
காலம் அறிந்து பயிர் விளைப்பான்: நீர்
ஊற்றின் அணையே சக்கரம் இயக்கி
உலகில் தொழில்கள் வளர்த்திடுவான்;

உயிரைக் கொல்லும் மின் சக்தி
உதவும் வாழ்க்கை செம்மையுற:
துயரைக் கொடுக்கும் விலங்கினமும்
தொண்டு செய்யும் பழக்கிவிடின்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றும் பூமி: சுரை விதையில்
சுரையே முளைக்கும்: அவரையல்ல:
மற்றும் இயல்புகள் அப்படியே!
மனிதன் யாரோ? இதை மாற்ற:

கனிந்த கனிகள் உதிர்ந்து விழும்
காலம் வந்தால் உயிர் நீங்கும்:
துணிந்து இவற்றை நீக்குவார் யார்?
சொல்ல முடியுமோ வெல்வம் என்று:

வீண் உரை: இயற்கையை வென்றேமெனல்
விளங்கினுல் யாவும் புரிந்துவிடும்:
ஆண்டவன் படைப்பு: அது இயற்கை:
அதன்பயன் காண்போம்: அறிவுகொண்டு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 அம்மா!

கனிந்த அன்பால் அரவணைக்கும்
தாயிடத்தில்
கண்ட அன்பை வேறெங்கும்
காண்கிலேன் நான்:
இனித்த முகங் காட்டி விந்தைக்
கதைகள் சொல்லி
எனக்களித்த உணவின் சுவை
எங்கும் காணேன்:

நீ சுரந்த பாலையே நான்முதல்
சுவைத்தேன்!
நினது அன்பு முகமே நான்முதலில்
பார்த்தேன்:
நீயணைக்க நான் துயின்றேன்
உந்தன் அன்பை
நினைக்கையிலே என் நெஞ்சம்
இனிக்குதம்மா!

மடியமர்ந்து விளையாடும் மழலைச்
செல்வம், இம்
மாநிலத்தில் பெருஞ்செல்வம்
என்று கூறி: எம்
அடியதனைக் கண்ணிலொற்றும்
அன்னை அன்பு
அகிலத்தில் எவ்வன்புக்
கொப்பாகுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்சுகத்தை எமக்களிப்பாள்
 தியாகியாவாள் :
தனை மறப்பாள் தன் பசியோ
 தாகம் பாராள் :
எம் சுகத்தைக் காணுவதே
 அவளின் இன்பம் :
இவ்வுலகில் அவளையே நாம்
 அம்மா என்போம் !

உள்ளபொருள் நீதான் என்
 மகனே ! என்றும்
உயர்ந்தோனாய் வாழ்ந்திடடா
 என்று கூறிக்
கல்வியறி வூட்டிடுவாள்; தந்தை
 போற்றக்
காட்டிடுவாள் நற்குணங்கள்
 கூட்டி நிற்பாள் !

பெரியமனம் காட்டி எமைச்
 சுமப்பவள் தாய்
பிறந்த பின்பும் எம் நினைவைச்
 சுமப்பாள் நெஞ்சில் !
உயிர்களுக்குத் தாய் அன்பே
 தஞ்சம் ! தஞ்சம் !
உலகதனில் சிறப்பேது
 அன்னை இன்றி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்கின்ற தன் குழந்தைச்
சிறப்பை யெல்லாம்
மற்றவர்கள் போற்றுகின்றபோது
தாய்மை
கிளர்கின்ற மகிழ்ச்சியினுல் சிந்தும்
கண்ணீர்க்
கீடேது! அதை விளக்கச்
சொற்கள் ஏதோ?

அம்மா என்றழைத்து அவள்
அருகிற் சென்று
அன்பு நெஞ்சில் முகம் புதைத்து
எதைக் கேட்டாலும்
சும்மா ஏன்? கண்ணே எழு
என்று கூறிச்
சொந்த அவள் உயிர் முதலாய்
விரும்பி ஈவாள்!

அறிவினிலே சிறந்திட்டாலும்
பெரியவர்கள்;
ஆகிடினும் புகழ் கண்டு
வாழ்ந்திட்டாலும்:
சிறியவர் நாம் தாய் முன்னுல்: எச்
சிறப்பும் எமைச்
சேர்வதெல்லாம் அன்னையினுல்
தெளிந்தாற் போதும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 வயது

பருவத்தின் அழகுதனை மாற்றிவிட்டாய்
படிப்படியாய்ப் பாழாக்கின்றாய்:
உருவத்தில் மெருகேற்ற எதை எதைத்தான்
செய்தாலும் ஒன்றுமில்லை:
புருவத்தில் மைதீட்டி முகம் மினுக்கும்
பூச்சுக்களைப் பூசினாலும்: உண்மை
உருவத்தைக் காட்டுகின்ற வயதே உன்னோடு
எமக்குறவு வேண்டாம்:

நில்லாது இளமை என நீ எமக்கு
இவ்வுலகில் நித்தம் நித்தம்
சொல்லாமல் சொல்கின்றாய்: ஏன்
கொஞ்சம் தூரப் போவேன்:
பொல்லாத குணமுனக்கேன், புது
இளமைப் பருவத்தைப் பொசுக்கி: எழில்
இல்லாத கிழப்பருவம் படிப்படியாய் அளித்து
எமை ஏன் கொல்கின்றாய்!

துடிக்கின்ற இளமை கெடும் அவ்விளமை
எண்ண மெல்லாம் தூரச் செல்லும்: பூ
முடிக்கின்ற கூந்தல் நிறம் முழுநரையாய்
மாறிவிடும் முதுகு கூனும்:
குடிக்கின்ற மருந்துவகை எதுகுடித்தும் பயனில்லை
சிறு நன்மை கொஞ்சமில்லை:
இடிக்கின்றாய் வயதே நீ: எம் பருவக்கோட்டைதனை
உந்தனுக்கு இதயமுண்டோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலைவில்லா வாழ்வு என இறுமாந்தோர்
உருக்குலைந்து வாடுகின்றார் :
தலைகீழாய் நின்றாலும் உனைமூடி மறைக்கும்
வழி சரியாய்க் காணோம்
அலை அலையாய் எழுந்துவந்து வயதே நீ
வாழ்நாளை அழிக்கின்றாயே !
நிலையில்லா இவ்வுலக வாழ்வுணர்ந்தோம்
நீ தந்த பாடம் அன்றோ !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22 ஒற்றுமை

ஒன்று இரண்டு மூன்று நான்கு என்னும் எண்கள்
ஒவ்வொன்ருய்த் தம்பெருமை பேசி நிற்க
ஐந்து என்னும் எண்ணெழுந்து நானே உம்மில்
அதிக மதிப்புள்ளவ னென்றறைந்ததுவே!

"அறுசுவையோ நான்" என்றெழுந்த தாறு
அதனைவிட இன்னிசையின் ஏழுசுரம்
தருகின்ற இன்பமே இன்பம்! என்று
தமக்குள்ளே வீண்யம்பம் பேசினவே:

எட்டெழுந்து எனது புகழ் அட்டதிக்கு
இங்கெவர்க்கும் பெருமையில்லை என்னில் என்று
தட்டிப்பேசி முடியுமுன்னே எண் ஒன்பது
தானெழுந்து நவரெத்தின 'ஒளி' என்றதே!

பலவாறு இவையெல்லாம் பெருமை பேசிப்
பலமிழந்து தம்தனிமை நினைத்துப் பின்பு
சில சொன்ன புத்தியினுல் ஒன்று சேர்ந்து
சிரித்தனவே சைபர் அதன் மதிப்பு எண்ணி:

எண்குலத்துக்குன்னுலே வெட்கம்: வெட்கம்! நீ
இருக்கின்ருய் தனித்து நின்று ஏது செய்வாய்
மண்ணுலகில் இருந்தும் பயனற்ருர் போல
வாழ்கின்ருய் மாள நீயேன் மனங்கொள்ளாயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சைபரே உன் பெறுமதிதான் என்ன? நீ
யார் தயவை நம்பி இங்கு இருக்கின்ருய் சொல்?
உய்வில்லாய்" எனக் கூறிப் பரிகசித்து
ஒவ்வொன்ருய் வசை கூறிப் பேசினவே!

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு," என்ற உண்மை
உணராது பகைக்கின்றீர் சற்றுக் கேளீர்
நன்றலரும் நறுமலரும் மாலையாக
நாரோடு சேர்தல் கண்டு நகைப்பீர்போலும்

"கட்டைவிரல் என்றதனுல் மற்றைய அக்
கைவிரல்கள் சேராது இருக்குமாமோ?
பட்டுலர்ந்த மரமெனினும் பால்நிலாவில்
பார்ப்பதற்கு அழகில்லையோ பகருவீரே!"

"கருமை நிறம் சார்ந்ததால் அத்தூய வெண்மை
கதித்திருக்கும் தன்னிறத்தில் இதை நீர் காண்பீர்
சிறுமையுற்ற கதைகள் சொல்லி நம் மதிப்பைச்
சிதைப்பதுதான் உம் அறிவோ சிந்திப்பீரே:"

"ஒவ்வொன்ருய்க் கூடுவதால் தானே இங்கு
உம் மதிப்பும் கூடும்: இதை உணராததேன்:
ஒவ்வொன்ருய்ப் பிரிந்திருந்து நீவிர், உம்
உள்ளத்தின் சிறுமைதனைக் காட்டல் நன்ருே:"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிறு துரும்பும் பல்குத்த உதவும்" என்பார்:
சேர்த்திடுவீர் உங்களுடன் தனித்தனியே
பெறுவீர் நீர் பெருமதிப்பு ஒன்று பத்தாய்:
பேசுவதேன் அகந்தை மொழி கண்திறமின்.

என்றுசொன்ன சைபர் மொழிகேட்டு அவை
இதயத்தில் தெளிவெய்தி அகந்தை நீக்கி
நன்று நன்று நாம் ஒற்றுமை கொள்வோம் நண்ப!
நம் மதிப்பே ஒற்றுமை! என நாடினவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 குழந்தையாய் இருந்தால்............!

குழந்தையில் குறும்பு செய்தால்
கொஞ்சுவார், மகிழ்வார், பின்நான்
வளர்ந்ததும் குறும்பு செய்யின்
வம்ப னென்றழைக் கின்ருரே!

அன்புடன் என்னைத் தூக்கி
அரவணைத் தாசை முத்தம்
இன்பமாய் அளித்தோர் இன்று
எட்டியே செல்வதேனே!

பிஞ்சிலே ஆடிப் பாடிப்
பேசிய தோழிமார்கள், இன்று
அஞ்சுருர்: கதைக்க நாணம்:
அவர்க்கும் நான் தவரு செய்தேன்!

சிறுவனுய் இருந்த போது
சிரித்து நான் மகிழ்வதன்றிக்
கவலைகள் அறியேன்: உள்ளம்
கருதிய யாவும் செய்தேன்:

சிந்தனை நடத்தை நோக்கிச்
செய்திடுங் கடமை நோக்கி
எந்தனை விமர்சிக்க இன்று
எத்தனை கண்கள் அப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலே வாழ்க்கைத் தொல்லை:
    உள்ளத்தில் ஆசைத் தொல்லை
பருவத்தின் தொல்லை: எனப்
    பலதொல்லை வருத்து தேனே!

பாசமென்றுண்டு ஒன்று:
    பலபல கடமை யுண்டு
நேசமென்றுண்டு ஒன்று:
    நினைக்கவே நெஞ்சம் எங்கே!

காதலர் ஒன்று சொல்வார்
    கடிந் தொன்று பெற்றோர் சொல்வார்:
ஏதேதோ சொல்வார் மற்றோர்
    எத்தனை அர்த்தங் காண்பேன்:

வளர்ந்ததின் பயனே இந்த
    வாழ்க்கையின் பொறுப்பு யாவும்:
குழந்தையாய் இருந்து வாழ்ந்தால்
    கோடி பல்கோடி இன்பம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 என்ன குணம்?

பூண்டுவேடம் பலபொய்யை உள் மறைத்துப்
புரிவார் அக்கிரமம் மறைவிலே:
வேண்டி இரக்கும் ஏழை துயர்களைய ஒன்றும்
விரும்பி ஈந்திட மனங்கொளார்:
ஆண்டவனின் பக்தன் என்றுகூறி, மற்றும்
அயலவர் பொருளைத் தீண்டுவார்:
மாண்ட தம் பெருமைகூறி மக்களிடம்
மதிப்படைய வழி காணுவார்:

தொண்டர் என்றுகூறித் தலைமை வேண்டுமென்
சொல்லில் மட்டுந்தான், செயலில்லை: [பார்:
கண்ட வெற்றியினுல் கர்வம் கொண்டிருப்பார்
காரியங்க ளெலாஞ் சுயநலம்:
பண்டு சொன்ன உரை பறக்கவிட்டு, லஞ்சப்
பணத்தை ஏற்க மனம் முந்துவார்:
உண்டு கயமையெலாம் இன்னும் உலகிலென்ருல்
உரைக்க வெட்கம் மறைக்க வோ!

சொந்தச் சோதரர்கள் துன்பம் கண்டுமனம்
துஞ்சினுலும் உதவி செய்யார்:
வந்த; வரும் பணத்தைச் சேர்த்துப்பத்திரமாய்
வைப்பதில் பெரிய சூரர் காண்,
எந்தப் பாவத்தையும் பணம் மறைத்துவிடும்
என்பதே இவர்கள் எண்ணம் போல்:
இந்த மூடர்கள் இருக்கிருர்கள்: இவர்க்கு
எத்தனை குணம்! என்னென்போம்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்த பேர்கள் என்பார், குணத்தில் கொஞ்ச
பண்பிராது பயன் ஏதுகொல்! [மேனும்
நடிப்பதெல்லாம் வெறும் நாகரிகம் அதால்
நயம் அவர்க்குந்தான் ஏதுண்டோ?
துடிக்கத்துடிக்க மனச்சாட்சியென்று, பிறரைத்
துன்புறுத்தியும் வருத்துவார்:
இடித்துச் சொல்லினும் இவர் செவிக்கு ஏறுவதோ
எப்போ இவர்கள் குணம் மாறுமோ?

விலை கொடுத்தும் புகழ்வேண்டும் பேர்வழிகள்
விரும்பிடார் பிறர் வாழ்வினை:
தலைகொடுத்து அறங்காத்த பரம்பரையில்
தாம் உதித்தாரென்று கூறுவார்:
நிலையில்லாத வாழ்வில் நெஞ்சில் ஈரமில்லார்
நினைத்துக் கோடி குழம்புறுர்,
தலையசைத்து இவர் சிரிப்பினும் மனதில்
சாந்தி காண்பாரோ? கூறுவீர்:

UNIVERSITY OF CEYLON LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 தாவணியைக் கண்டாள்!

பூவணிக்கும் பொன்னணிக்கும் மேலாகப் பண்புள்ள
தாவணியைக் கண்டாள் தமிழ்ப் பெண்ணுள் !—சீர்
பெண்மை எழிலும் பேசரிய நாற்குணமும் [ததும்பும்
கண் மறைத்தாள் தாவணியால் காண்:

நெஞ்சிலேகற்பை நிறுத்தி அதைக் காக்கப்
பிஞ்சிலே மேலாடை போர்த்திடுவாள் — கொஞ்சும்
பருவ அழகுதனைப் பக்குவமாய்க் காத்திடவே
அருமை அவள்கண்ட அணி:

கண்ணிமை போலாகும்: கன்னியரின் மேற்போர்வை
பெண் சிறப்புப்பேணும் பெருமைதரும் — மண்
தற்காத்து வாழத்தமிழ்ப் பண்புடன் வளரச் [ணுலகில்
சொற்காக்க மார்பில்துணி:

நாகரிகம் என்றுமேல் நாட்டினரின் பாணியிலே
ஆகும் உடையணிவர் அரைகுறையாய் — பாரதனில்
அறிவாரோ தமிழச்சிகண்ட உடைச்சிறப்பு
புரிவரோ புத்தி தெளிந்து:

விஞ்சுகின்ற தன்னழகை வெளிக்காட்டிக்கொள்வதற்கும்
அஞ்சினுள், அதைமறைத்தாள் தாவணியால்—பண்
உடல் எழிலேக்காட்ட ஒப்புக்குத்துணியணிவோர் [பின்றி
பழகட்டும் தமிழ்ப் பெண்ணைப்பார்த்து:

மலராய் மலர்ந்தும் மற்றவரைக் கவர்ந்திழுக்க
அவளோ விருப்பம் அற்ற பண்பாள்! — சிலர்போல
பிறருக்கு இடறலாய்ப் பேதமையைக் காட்டி
இருக்க மனம் கொள்ளாள் இங்கு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26 அன்பு

உயிரில் கலந்துறவாடிப் — பல
உள்ளங் கவர்ந் தெழும் அன்பு:
பயிலும் தொறும் தெய்வப் பண்பை—எம்முள்
பாய்ச்சி ஒளிர்வது அன்பு:

ஒன்றே குலமென்ற உண்மை — உயிர்
ஓம்பி வளர்த்திடும் தன்மை;
நன்றே புரிந்திடும் பான்மை — எல்லாம்
நாளும் அளித்திடும் அன்பு:

அறிவில் இனியது அன்பு — நல்ல
அறத்தை வளர்த்திடும் அன்பு:
விரியும் கருணைக்கு அன்பு — வான்
வீட்டை யளிப்பதும் அன்பு:

வாழ்வை மலர்த்திடும் அன்பு — இவ்
வைய மியக்கிடும் அன்பு:
பாழும் பகைமையை ஓட்டி — மனிதப்
பண்பை உயர்த்திடும் அன்பு

தீமை யொழிப்பது அன்பு — செகம்
திருந்த விழைவது அன்பு:
வாய்மை வளர்ப்பதும் அன்பு—பல
வாறும் இலங்கிடும் அன்பு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளங் கபடில்லா அன்பு — அது
காலத்தை வென்றிடும் நின்று
சொல்லி லடங்காத தன்பு — தன்
துன்பங் கருதாததொன்று

ஆண்டவன் ஈந்த திவ்வன்பு — இது
அகில உலகிற்கும் தெம்பு:
மாண்டு மடியாது நின்று — எங்கோ
மலர்ந்து பிணித்திடும் நன்கு,

தன்னைக் கொடுத்திடும் அன்பு — சமா
தானம் வளர்த்திடும் நின்று:
நன்மை புரிவதும் நட்பைப் — பேணி
நாளும் வளர்ப்பதும் அன்பு:

உள்ளத் திலுறையும் அன்பு — தடை
ஒழித்து மிளிர்வது அன்பு:
அள்ளக் குறையாது அன்பு — அது
ஆண்டவன் சாயலா மென்றும்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27 அறிஞரும் படகோட்டியும்

நயந்தறிவு பெற்ற நாலறிஞர் கூடித்
தொடர்ந்தார் பயணம்: தூரமதிக மில்லை:

நாற்புறமும் கடல்: நடுவே அச்சிற்றூர்
பார்ப்பதற்கு ஏற்றஎழில்: பழம்பெருமையுள்ள இடம்

தேடற்கரிய கல்விச் செல்வம் சுமந்தவர்கள்
ஓடத்தில் சென்றார்: உரையாடித் தாம் மகிழ்ந்து:

விஞ்ஞானி ஒருவர்: வேதாந்தி மற்றொருவர்
அஞ்ஞானம் போக்கும் அறிஞர், வைத்தியராம்:

தத்தமது கல்வித்தரம் விளங்கக் கதைத்துப்
புத்தம் புதிய கலைப் புதுமையெல்லாம் வியந்தார்!

புத்திக்கும் மனிதன் புகழ் அடைவதற்குமிந்த
வித்தைகளே காலாம்: என விரிவாய் உரைத்தார்கள்:

கல்லாதார் வாழ்வு கனியாது என்று சொன்னார்: இச்
சொல்லதனைக் கேட்டுத் துடித்தான் படகோட்டி:

அறிவுத்துறை மேலாம்: அதையடையார் தம் வாழ்வைப்
பறிகொடுத்து நிற்பார்: பாரிலவரெதற்கென்றார்:

உரைகேட்டு எல்லாம் உளத்திருத்தி ஓடம்
திரைகிழித்துச் செல்ல செலுத்தினான் படகோட்டி:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை நினைந்தான்: அறிஞர் தத்துவங்களை நினைந்தான்:
என்னே! இவர் அறிவு என்றுந்தன்னுள் வியந்தான்:

ஓடம் செலுத்தி உயர்ந்த கல்வி காணுமல்
பாடுபடும் ஏழைப் படகோட்டியைப் பார்த்து

"விஞ்ஞானம் பற்றி நீ மேதினியில் யாதறிவாய்?
உய்ஞானம் எல்லாம் உலகிலே அவ்வறிவால்!"

என்றுரைத்தார் ஒருவர், ஏதும் அறியேன் ஐயா!
அன்று நான் படித்ததெல்லாம் ஐந்துக்கும் கீழ் என்ருன்.

பிரபஞ்ச வாழ்க்கையதன் பேறதனை விளக்கிப் பல
விதமாகச் சொன்னுர் வேதாந்தி: பின்னெருவர்

"உளநூல் அறிவு கொஞ்சம், உனக்கு அது வேண்டும்
பழக முடியாதுலகில் பக்குவமாய் அக்கல்வியின்றி"

என்று சொல்லி அதன் சிறப்பை எடுத்து விளக்கிடவே
"நன்றி" என்ருன் படகோட்டி நாணம் மனம்வருத்த:

வாழ்க்கைக்கு ஏற்ற கல்வி வாசனையில்லாதுவிடின்
வாழ்க்கையே பாழாம்! மனம் கொள்வாய் என்றுரைத்தார்

உடலின் நிலையதையும் உணவின் வகையதையும்
கடலோடி நீ கொஞ்சம் கற்றுக்கொள் என்று சொல்லி

கூறினுர் வைத்தியர்: கூற்றைச் செவிமடுத்தான் - இதை
மீறினுல் துன்பமென்ருர்: மீண்டும் பல புத்திமதி:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினவினர் கேள்வி பல : விழித்தான் பதிலின்றி
நினைவில்லை முன்படித்த நெடுங்கணக்கு மௌனப்பகர்ந்தான்

கல்வியறி வளித்துக் காக்க எனக்கார் இருந்தார் :
கல்வி இல்லா நான் கற்றது இத்தொழில் ஒன்றே :

ஓடப் பிழைப்பும் ஓங்குகடல் நீர்ச் சிருமின்றி
ஒன்றும் அறியேன் என உரைத்தான் தொழிலாளி :

வெட்கம் கதைக்க, வித்தகர்கள் நால்வருடன்
துக்கமும் கூட : தோணியைச் செலுத்தினனே !

அன்னமாய் ஓடம் அசைந்து கடல்நீர் பிரித்துச்
சின்ன ஊர்சேரச் சிறுதூரம் தானிருக்கும் :

வானம் கறுக்க வலுவாகக் காற்றடிக்கப்
போன திசை மறித்துப் பொங்கினவே பேரலைகள் :

என்னே ! இரைச்சல் எங்கும் மழைமேகம் !
கண்ணை மறைக்கக் கலங்கினரே நல்லறிஞர் !

இடியும் பெருமழையும் ! எம் வாழ்விறுதியென்று
துடியாய்த் துடித்துத் துணை நீயே என்றுரைத்தார் :

சுற்றியது ஓடம் சுழல் காற்றின் தாக்குதலால் !
எற்றின நீளலைகள் ! எங்கும் பரபரப்பு !

அடிக்கும் கடலை அடக்கித் துணிவுகொண்டு
பிடித்தான் படகை : பிளந்தன அப் பேரலைகள் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுறும் அலைகள் சில கொந்தளித்து வந்தடிக்கத்
திமிறியது ஓடம்: திரையுட் புகுந்ததுவே!

பாய்ந்தான் படகோட்டி பக்குவமாய்க் காத்தவரை
நீந்திக் கரைசேர்த்தான்: நினைத்தார் அவன் திறனை!

கேளப்பா வாழ்க்கை கெட்டுதப்பா! என்றவரை
வாழுமப்பா என்று வைத்தான் படகோட்டி!

வாழ்க்கைக்கு நல்லறிவு மட்டுந்தான் போதுவதோ!
ஆக்கம் அளிக்கும் உன் அருந்திறனும் வேண்டுவதே!

நீந்தத் தெரிந்ததினுல் இரட்சித்தாய் எம்மை!
ஆந்துணையாம் உன் அறிவு: அதுவும் முக்கியமென்முர்:

மகிழ்ந்தான் படகோட்டி! மாண்டவரை மீண்ட எண்ணம்
புகழ்ந்தார் சொற்கேட்டு பொங்கிய தவன் ஆண்மை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28 பெண் அழகு

"மாது" என்ருல் அழகு என்று பொருள் அதையே
மதியுள்ளார் பெண்குலத்திற் கிட்டுப் போந்தார்:
நீதில்லா எழில் குணங்கள் பெண்ணில் கண்டார்:
சிந்தித்தார், பெருமையென்ருர்! பெண்குலத்தால்:

அன்னநடை பெண்நடைக்கு நாணும்: காற்றில்
அசைகின்ற பூங்கொடியும் அவளைக் கொஞ்சும்:
சின்ன இடை மின்னலென அஞ்சும் மேகம்:
சிவந்த இதழ் வாய்சிரித்தால் சிந்தும் முத்து:

மான் என்பார் அவளை, அன்னம் மஞ்ஞை என்பார்
வளர்மதியோ தாமரையோ! வதனம் என்பார்:
தேன்மலர்கள் இணைந்த ஒரு வடிவோ! என்பார்
சிந்தித்தால் கற்பழகிற் கிவை ஒப்பாமோ?

மதிமுகத்தில் கருவண்டாய் இரண்டு ஆடும்:
மனங்கண்டு அதைத்தாவும், மலரும் நெஞ்சம்:
கவிபிறக்கும் கற்பனையும் ஊறும் என்ருல்
காரிகையார் சிறப்பு எல்லாம் கற்பனையோ?

சிந்தாமல் சேர்த்துவைக்கும் மேனியெழில்: வெளிச்
சிந்துதற்கு ஏற்ற உடை: புதிய நடை
முந்தானை எழில்வண்ணம்: முகத்தில் சாயம் பெண்
முழு அழகை விளக்கிடுமோ? முறையோ சொல்வீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதியாகப் போற்றிடின் பெண் புற அழகில்
நிலையான பெண்மை ஒளி செய்யுமாமோ?
துதிபாடும் நாற்குணமும் கற்பும் அன்றே
துலக்கிடுமே பெண் எழிலைத் தூயதாக:

அலங்கார உடையணிகள் யாவும் சேர்ந்தும்
ஆகுமோ பெண்மைக்கு அணிகலனாய்:?
சினங்காப்பீர்! இவையாவும் தேர்ந்த உண்மை:
செயற்படுவீர் தாய்க்குலத்தீர் அறத்தைக்காப்பீர்!

கொஞ்சுகின்ற அழகைவிடச் சீர்ததும்பும்
குணம் விளங்கக் குலப்பணிகள் நன்கு ஆற்றின்
விஞ்சுகின்ற புகழ்மேவும்! பெண்மை ஓங்கும்:
வெறும் அழகு குலப்பெருமை விளக்குமாமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29 அறிவு காண்போம்!

வான்வெளியில் பறவையெனச் சுற்றுகின்றான்!
மண்ணிலெங்கும் வீதிகிழித் தேகுகின்றான்:
மீனினமாய்த் திரிகின்றான் நீரில்: தொழில்
வெற்றிகண்டான் மெத்த: அணு சக்தியாலே!

கங்குலையும் ஒளி உமிழ்ந்து பகலாய் மாற்றி: நோய்
களைந்து பல விந்தைகளும் கண்டுவிட்டான்:
தங்கி மறைந் திருந்த உண்மை சாற்றிவிட்டான்:
தன்னறிவால் பெரும்புகழும் ஈட்டிக்கொண்டான்:

மந்திரமே தஞ்சமென்ற பேர்களெல்லாம்
மதிபெற்றார்: சிறப்பாக வாழ்வு கண்டார்:
அந்தரத்தே! நீந்துதடா உயிர்களெல்லாம்:
அதிசயந்தான்: யாவும் அணு சக்தியென்போம்!

பூமியிலே நடக்கின்ற செய்தியெல்லாம்: நொடிப்
பொழுததனில் கிட்டிவிடும், இசையும் கூட்டும்:
மேவியெழும் அறிவதனால் சுகம் விரியும்
விளக்கமுடியாத நன்மை விஞ்ஞானத்தால்:

மேதினியில் விஞ்ஞானம் மனிதன் வெற்றி!
மிகையில்லை புதுஉலகம் விருத்தியாச்சு
ஆதியிலே உள்ளவர்கள் நினைத்தும் பாரா
அற்புதங்க ! அதை இன்று நாம் காண்கின்றோம்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்தையடா மாயமில்லைப் புவியிலெங்கும்
விஞ்ஞானம் செய்கின்ற புதுமை கோடி!
சிந்தையிலே இவ்வறிவு போற்றி: ஞாலம் வாழச்
செய்திடுவோம்: நாமுமதால் உய்திடுவோம்!

வான்பிரித்துச் சந்திரனைத் தாவி ஓங்கி
வளரும் விஞ்ஞானம்கண்டு மகிழ்ச்சி! ஆனல்
ஏனிந்த அணுக்குண்டு? இதையறியோம்:
இவ்வறிவு எமையழிக்கும் கருவியாமோ?

ஈசனீந்த அறிவுகொண்டு புகழும் ஏந்தி
இன்புற்று இருப்பதற்குப் புத்திகெட்டு
நீசத்தன அழிவுகட்கு அணுசக்தியை
நினையாது அறம்காத்து நாம் மகிழ்வோம்:

ஓங்கிவரும் எம்அறிவே எம்மைக்கொன்ருல்
உலகதனில் எம்சிறுமை உரைக்கப்போமோ?
தாங்கிடுவோம் சிறப்பெல்லாம் அறிவினலே!
தக்கபடி ஆக்கவழி கண்டுவாழ்வோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 உயர்ந்திடுவோம்!

பணியினால் உயர்ந்திடுவோம் — பாவப்
பழிதரும் செயல்களை வெறுத்திடுவோம்:
துணிவோடு முன்னடப்போம் — நேர்மை
துணைக்கொண்டு வாழ்ந்து சிறப்புறுவோம்:
அணி செய்வோம் நற்குணத்தால் — எமை
அற்பத்தனங்களுக் காளாக்கிடோம்:
பணி செய்வோம் பண்பு ஓங்கப் — பிறர்
பகைமையை நீக்கியே அன்புகொள்வோம்:

மதிப்புள்ள மனித இனம் — நல்ல
வகையான அறிவுள்ள மனித இனம்,
சபிப்பதும் தம் இனத்தைப் — பகை
சண்டையிடுவதும் பண்பாகுமா?
துதித்திடும் இறைவன் இல்லை — அவன்
துணையில்லை உயிருக்கு என முழங்கல்
கதித்திடும் அறிவினுக்கும் — புத்தி
கல்விக்கும் ஒவ்வுமோ கூறிடுவீர்!

பொருளுக்கும் புகழினுக்கும் — பெரும்
பொன்னுக்கும் கோழையாய்த் தலைவணங்கோம்:
இருளுக்குள் இருப்பவரைத் — தீயோர்
ஏமாற்றுக் காளாகி அழிபவரை
அருள்வழி அழைத்திடுவோம் — அவர்
அறியாமை யாவையும் போக்கிடுவோம்:
மருள்நீக்கி உண்மைகாண — நல்ல
வகையான தொண்டுகள் செய்திடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்தில் அன்பைத் தேக்கி — அதை
எல்லோர்க்கும் ஈந்து மகிழ்ந்திடுவோம்:
"புதியதோர் உலகு செய்வோம்" — கெட்ட
போர்பகை நாத்தீகம் வேரறுப்போம்:
வறியவர்க்கிந் துண்ணுவோம் — அவர்
வாழ வழியும் வகுத்திடுவோம்:
அறிவுடன் வாழ்ந்திடுவோம் — பூவில்
அறவழி நின்று, செயற்படுவோம்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 திருந்திய நல்லாள்!

மையிட்டுக் கண் துலங்க முகம் மினுக்கி
வாயிதழில் கடும் சிவப்பை அள்ளிப்பூசி
கைதலையில் கால்கழுத்தில் காதில் தங்கக்
கட்டிகளால் செய்த அணி சிறப்பாய்ப் பூண்டு
மெய்தெரிய மென்துகிலை விரித்துப் போர்த்து
வீதியெங்கும் நாற்புறமும் விழியை ஓட்டிப்
பொய்யெனவே கூறும் அவள் இடையைக் காட்டிப்
புதுநடையும் போட்டுவந்தாள் பாவை கண்டேன்!

வீதியிலே வந்த இந்த நங்கை தன்னை
விருப்புடனே நான் பார்த்து முறுவல்செய்தேன்:
"கோவிலுக்குப் போகிறேன் நண்ப!" என்றாள்
குலுங்கிடவே அங்கமெல்லாம் சிரித்தாள் சற்று:
நேரமது ஆயிற்று பூசைக்கென்றேன்
"நில்லாது செல்" என்று விடையும் பெற்றேன்:
சேதி சொன்ன மங்கை அவள் மடமை எண்ணிச்
சிந்தித்தேன் சிந்தித்தேன் சிரித்தேன் என்னுள்:

ஆண்டவனும் விரும்புவது அழகணியோ?
அன்பர்களின் உள்ளமென்று அறியீரோ நீர்?
வீண்பெருமை வீடாமோ? கோவில் தூய
விண்ணரசன் வீற்றிருக்கும் இடமல்லவோ!
மாண்புடனே சென்றிடுவீர் அவர் இல்லிற்கு
வணங்கிடுவீர் சிரம்பணிந்து வாழ்த்தி வாழ்த்தி:
ஆண்டவனார் விரும்புவதும் அழியா எங்கள்
ஆன்மாவின் அழகல்லால் வேறுயாதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையிலே பொங்கிவந்த இக்கருத்தைச்
செவ்வியதாய் எடுத்துரைத்தேன், மறுநாட்கண்டு
மங்கையவள் மனம் கொண்டாள் என்னுரையைத்: தன்
மடமைதனை எண்ணி வெட்கி மனமும் சோர்ந்தாள்!
"சிந்தையிலே தெளிவு கொண்டேன் அன்ப" என்றாள்
'திருந்திவிட்டேன் நான்' என்றாள் மனம் மகிழ்ந்தேன்
எந்தனைப்போல் பெண்களுக்கு இவ்வுண்மையை
எடுத்துரைப்பேன் திருத்திடுவேன் என்றாள் நல்லாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 32 மலர்ந்திடாய் புதிய ஆண்டே!

மானிடர் பண்பு ஓங்க
வளர்ந்திட நல்லறங்கள்
தேனினும் இனிய அன்பு
செகமெல்லாம் பெருகித்தங்க,
"நான்" என்னும் அகந்தை தீமை
நலிவுற்று அழிய: இன்பம்
வானமுதாகப் பொங்க
மலர்ந்திடாய் புதிய ஆண்டே!

பொருளோடு சுகமும் நல்கிப்
புதுமைசேர் குணமும் நல்கி
அருள்வழி ஆக்கம் நல்கி
ஆனந்த வாழ்வும் நல்கி
இருளினை அயர்வை நீக்கும்
இளங்கதிர்ச் செல்வன்போல
மருளெல்லாம் நீங்கி ஓட
மலர்ந்திடாய் புதிய ஆண்டே!

போரினல் அமைதி கெட்டுப்
பொறுமையும் நலமும் கெட்டுச்
சீரிய பண்பு கெட்டுச்
சிதைந்திட்ட உலகுதன்னை
நேரிய வழியில் அன்பு
நெறியினில், சமாதானத்தில்
காரியம் இயற்ற வழி
காட்டிடாய் புதிய ஆண்டே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் ஆட்சி யென்றும்
மக்களுக்காய் அமைந்து
திக்கெல்லாம் சிறக்க — மனம்
திருந்திட: தீமை செய்வோர்
வெட்கியே தலை குனிய
வித்தகர் அறிஞர் கூடி
ஒத்துல கோம்ப: உண்மை
ஒளி ஈவாய் புதிய ஆண்டே!

அறிவினுல் மக்கள் தம்மை
அழிக்கின்ற சிறுமை மாறி
அறிவினுல் அகிலம் வாழ
அணுசக்தி ஆக்கமீய
உலகமோர் குடும்பமாக
உயிரெல்லாம் உறவு ஆக
பலவகைப் பேதம் நீக்கிப்
பக்குவம் அளிப்பாய் ஆண்டே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 33 கருகிய மொட்டு!

அன்னையின் வயிற்றிலே நான்
    அடைபட்டு இருந்தேன்: அங்கு
என்னெதிர் காலம் பற்றி
    எத்தனை இன்ப எண்ணம்!
பின்னியே உள்ளந் தன்னில்
    பீறிட்ட ஆசை பல
என்னை நான் உலகிருத்தி
    எவ்வளவோ கனவு கண்டேன்!

அன்னையோ என்னைப்பற்றி
    அடிக்கடி கதைப்பாள்: அப்பா
தன்னையும் மறந்து இன்பத்
    தடாகத்தில் மிதப்பார்: என்
பொன்னுடல் காணப் பாட்டி
    பொறுமையை இளந்திருப்பாள்:
சின்னப்பெண் பிறப்பாளென்றும்
    சொல்லுவார்: உற்றார்: கேட்பேன்:

பட்டு என்மேனி! தங்கப்
    பழமாகும் எனது தோற்றம்
சிட்டெனப் பறக்க ஏற்ற
    சிறியகை கால்கள், ஆகா!
கட்டான உடலுங்கூட: இவை
    காட்ட நான் உலகிற்கெப்போ
திட்டமாய்ச் செல்வேனென்று
    தேதியும் நாளும் பார்ப்பேன்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தில் பிறக்கும் அந்நாள்!
ஒரு கோடி இன்ப நந்நாள்!
பலர்முகம் பார்த்து அன்பும்
பாசமும் கொள்ளும் பொன்னுள்!
அதைச்சொல்ல வார்த்தை யேது?
அத்தனை மகிழ்ச்சி: யானும்
அதைச் சொல்லேன்: பிறந்த பின்பு
அடைந்துளம் மகிழ்வேனென்றும்:

பனிமலர் வதனமும் என்
பால்வண்ண வடிவும்: செழுங்
கனியிதழ் மழலை இன்பம்
கண்டு கண்டின் புறுவர்!
இனிமையாம் குழந்தைச் செல்வம்
என்றவர் சொல்வர்: கேட்டு
நனிபெரும் உவகை கொண்டு
நானெனை மறந்திருப்பேன்!

ஆண் என்பார் அப்பா என்னை
அன்னையோ, பெண் குழந்தை
தானென்று மகிழ்ச்சி மீறித்
தன்னையும் மறந்து சொல்வாள்!
ஏன்: இந்த யம்பம் என்று
இடையிலே நிற்பாள் பாட்டி
நான் இவையெல்லாங் கேட்டு
நன்ருகச் சிரிப்பே னென்னுள்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணே! எம் செல்வமென்று
கட்டியே முத்தமீவார்!
விண்மலர் நிலவு காட்டி
விந்தையாய்க் கதைகள் சொல்லி
உண்ணென அம்மா அமுது
ஊட்டுவாள் அன்பு பொங்கும்:
வண்ணமாம் சட்டை தொப்பி
வகைக்கொன்றாய் அணிந்துவப்பார்:

பாட்டிக்கு என்மேல் உயிர்:
பழங்கதை சொல்வாள் கேட்பேன்:
ஆட்டுவாள் மடியில் போட்டு
அதற்கேற்ற தாலாட்டோடு:
வீட்டுக்கு விளக்கே! அன்பால்
விளைந்த நற்பேறே! என்பார்:
கேட்டு நான் மகிழ்ந்து இன்பம்
இளர்ந்திட முறுவல் பூப்பேன்:

பூங்காவில் தோழிமார்கள்
பூப்பறித் தாடி நிற்பார்:
பாங்காக நானும் சென்று
பாடியே ஆடிடுவேன்:
ஆங்கவர் மத்தியிலே
ஆயிரங் கதைகள் பேசித்
தீங்கில்லாக் குறும்பு செய்து
சிரித்து நான் களித்திருப்பேன்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளியில் பாலரோடு
படிப்பதும் எனக்கு இன்பம்:
துள்ளியே நடனம் ஆடத்
துடிக்குமென் உள்ளம்: அந்தப்
பள்ளியின் கதைகள் கேட்டுப்
பாட்டியும் என் அம்மாவும்
அள்ளியே அணைப்பார்: இன்பம்
அவர்க்குந்தான் பெரிய இன்பம்!

விரும்பிய பொருட்கள் யாவும்
வாங்கியே அளிப்பார் அப்பா!
இருந்துடன் பணிகள் செய்வாள்:
என்னன்பு அன்னை: எந்தன்
கரும்பினும் இனிய பேச்சு
கற்கண்டாம் அவர்க்கு: அதை
அருந்திடச் சும்மா சும்மா
அடிக்கடி கதைப்பார் மற்றோர்!

உலகிலே தீயோர் சிலர்
இருக்கின்றார் என்று கேள்வி
கலகஞ்செய் குணத்தோர் பக்கம்
கண்ணெடுத்தும் நான் பார்க்கேன்:
பழகிடும் பண்பு ஓங்க
பலருமென் குணத்தை மெச்ச
உலகினில் வாழ்ந்து நல்ல
உயர்நிலை நானடைவேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடித்தது எந்தன் உள்ளம்
தூண்டிய தாவல், பின்னும்
அடிக்கடி இன்ப எண்ணம்
ஆயிரங் கனவு: மேலும்
முடிந்திடும் எனது சிறை
மூன்று நாட்பொழுதில்: அப்பால்
மடிந்திடும் துன்பம்: இன்பம்
மலர்ந்திடும் என்றிருந்தேன்:

நோயுற்ருள் அன்னை ஓர்நாள்
நொந்தவள் வருந்தித் துன்பப்
பாயுற்ருள்: தந்தை கண்டு
பரிதவித் தழுது நின்ருர்:
தேய்வுற்ற தெந்தன் இன்பம்
செய்வதறியாது துன்ப
வாயுற்றுத் துடித்தேன் — எம்மை
மருத்துவ மனையில் சேர்த்தார்:

மருத்துவர் வந்தார்: அன்னை
வேதனை கண்டு, தங்கள்
கருத்தினில் பட்ட உண்மை
கவலையோடுரைத்தார்: கேட்டேன்:
"பிழைத்திட வேண்டிற் பிள்ளை
பிரிந்திடும் தாயின் உயிர்"
விழைந்திடிற் ருயின் வாழ்வு: சேய்
இறந்திடும்: தப்பாதென்ருர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈருயிர் காத்தல் எம்மால்
இயலாத செயலாம் என்று
கூறினர் வைத்தியர்கள்:
கொடுமை! ஈதென்னவென்று
வாய்விட்டு அழுது பாட்டி
வருந்தினள் கண்ணீர் மல்கி:
ஆகட்டும் இறைவன் சித்தம்
அதற்குமேல் நாம் யாரென்ருள்!

தாய்பட்ட துன்பம் என்னே!
தந்தையின் துடிப்பு ஐயோ!
வாய்விட்டுப் பேசாச் சின்னன்
வருந்தினேன் உள்ளம் நொந்து:
ஓய்வின்றி உளத்தெழுந்த: என்
உலகத்து ஆசையெல்லாம்
தீய்ந்தன துன்பத் தீயில்
சிந்தித்தேன் தலைப்பட்டேன் நான்!

பெற்றதாய் மடிந்த பின்பு
பிறகென்ன வாழ்வெனக்கு?
உற்றது: எந்தன் உயிர்
உவந்தளித் தன்புத் தாயை
மற்றவர் மகிழக் காத்து
வாழ்வளிப்பதுவே மேலாம்!
உற்றதும் இதுவே என்று
உள்ளினேன் உள்ளந்தன்னில்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனைப்பட்டேன்: அங்கு
விம்மியே புரண்டேன்: அந்த
வேதனை மிகுதியால் என்னுயிர்
விண்ணிலே கலந்ததம்மா?
சாதனை! என்தாய் காத்துச்
சாந்தியை அடைந்தேன்! அம்மா!
ஏதெனித் துன்பம்! யாவும்
என்னுடன் முடிந்ததன்றே!

கட்டவிழ்ந் தலர்ந்து மணம்
கமழாது கருகிப் போகும்
மொட்டானேன்! உலகோா எந்தன்
முகங்காணு முன்னே கண்ணில்
பட்டிடா மலராய் யாரும்
பார்க்காத சிலையாய்ப் போனேன்!
கிட்டிடா இத் தியாகம்
கிடைத்ததே எனக்குச் சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 34 சோமசுந்தரனுர்

தண்டமிழின் சுவை மாந்தித் தரணிக்கிந்த
தாதாவே! இனியகவி மரபின் ஊற்றே!
பண்ணினிமை தோய்ந்து சுவை விஞ்சும் உந்தன்
பைந்தமிழின் கவிதைக்கு நிகருண்டாமோ?
விண்ணெளியின் கலைவடிவும் மேதையுள்ளம்
வித்தகனே! தமிழ்மலரப் பணிசெய்தோனே!
எண்ணமதில் இனிக்கும் நின் கவிதை யாவும்
ஈழத்தின் புகழுமதிற் சேர்ந்திலங்கும்:

சிந்தையிலே வந்துறையும் அறிவினேடு
தீந்தமிழின் சிறப்பெல்லாம் பொலிவாயுண்டு:
வந்துபல சிறுவர்கள் மகிழ்ந்துபாடும்
வளமான கவிப்பூங்கா, வகை வகையாம்:
அந்தமில்லாத் தேவருண்ணும் அமுதமென்றும்
அள்ள அள்ளக் குறையாது, நின்படைப்பில்
எந்தையே! நின் தமிழ்த்தொண்டை யேற்றிநாளும்
இறும்பூகு தெய்துதெங்கள் உள்ளமன்றே!

"நாமகளின் புகழ்மாலை" உயிரிளங் குமர
நாடக நூல் "சிலேடை வெண்பா" மிக நயந்தோம்:
தேமதுரத் தமிழின்பம் தெவிட்டாதென்றும்
தித்திக்கும் "இலங்கைவள நூல்" தனிலே:
பாமணக்கும் 'பதிற்றுப்பத்தில்': தமிழிற்றேய்ந்து
பரிமளிக்கும் நின்புலமை பாரில் என்றும்:
வாமமலர் கவிக்கொத்துத் தமிழ்ச் சிருர்க்கு
வற்ருத பாகை அள்ளி வாரியூட்டும்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைகொழிக்கும் தமிழ்ச்செல்வி பூண் அணியில்
கான்றிடும் பிரபை: உந்தன் கலைசேர் மாட்சி:
தலைநிமிர்ந்து பெருமைகொள்வார் தமிழின் மைந்தர்
தரணியெங்கும் புகழ்பரவும், தமிழ்மணக்கும்
விலைமதியாச் சொல், பொருள், நலம் சுரந்து
விரைந்து தமிழ்சிந்தைக்கு விருந்ததாகும்:
அலையலையாய் தமிழின்பம் அடுத்து மேவும்:
அத்தனையும் நின்புலமை அறையப் போமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35 சுவாமி ஞானப்பிரகாசர்

தற்பரன் மறையை நன்கு
    தரணிக்கு அளிக்க வந்த
சொற்கலைப் புலவா! தமிழ்ச் சோதியே
    அணியே! உந்தன்
நற்பெருஞ் சேவை கண்டோம்
    ஞானமும் அறிவும் துய்த்தோம்:
இப்புவி மறக்குமோ? நின்
    இணையில்லாப் புலமை தன்னை!

ஓதினாய் உலக மெங்கும்:
    உயர்மொழி தமிழ்தான் என்று:
ஆதியாய் உள்ளதென்றாய்
    அமிழ்தினு மினியதென்றாய்!
வாதிட்டே பெருமை நட்டாய்
    வளம்செய்தாய் செம்மொழியை:
கோதில்லாக் குரவா! கலை
    கொழித்திடும் தமிழின் மைந்தா!

பன்மொழி கற்ற ஞானப்
    பண்டிதா! "ஒப்பியல்" என்னும்
நன்னகராதி தந்து ஞாலத்தோர்
    கருத்தை ஈந்தாய்!
"என்னுயிர் தமிழாராய்ச்சி"
    என்றுரைத்ததை மேற்கொண்டாய்:
உன்பணி புகழ்வோம்: என்றும்
    உயர்தமிழ் உள்ள நாளும்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநிமிர்ந் துன் உழைப்பால்
தமிழன்னை மகிழ்ந்தாள்: உந்தன்
கலையுணர்ந் தயல் நாட்டார்கள்
கௌரவித் தின்பங் கண்டார்:
நிலையறிந் தினிய தமிழ்நீ
வளர்த் தின்பம் ஈந்தாய்:
விலைகாணுப் புலமை ஏந்தும்
வித்தகா! சற்குரவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36 விபுலானந்த அடிகள்

"என்கடன் பணிசெய்து கிடப்பதொன்றே" என்ற
இன்னுரைக்கு இலக்காகித் துறவு பூண்டு:
தன்னலத்தை தவிர்த்து தமிழ்ப்பணிகள் செய்தோன்
தவமுனிவன் இனிமைநிறை தமிழின் செல்வன்!

யாழ்நூலால் இசைத்தமிழின் சிறப்பை நாட்டி
நல்லுரையால் உளங்கவர்ந்து அறம் வளர்த்து
ஆழ்வான புலமைகொண்டு அறிவுகண்டு
அரும்பணிகள் ஆக்கியளித் தமரனுனாய்!

பாங்காகப் பலமொழியிற் புலமைகண்ட
பண்டிதன்காண்! தவமுனிவன் விபுலானந்தன்!
சாந்தனையும் தொண்டதனை நெஞ்சில் காத்து
தமிழ்மலரக் கலைவளரத் தன்னை ஈந்தோன்!

மறைமுதல்வன் மட்டுநகர் ஈந்த செம்மல்
மதிவல்லோன் முத்தமிழின் இனிமைகண்டோன்
இறைவனுக்கே தன்னிதயம் மலராய் ஈந்து
இவ்வுலகில் தூயவழி கண்ட நல்லோன்!

செந்தமிழில் ஆங்கிலத்தில் நாவன்மை பெற்றுச்
செகமெல்லாம் வியந்திட நற்புகழும் கண்டோய்
எந்தமிழ்த்தாய் மகிழ்ந்திடவே "நாடக நூல்"
இயற்றி அவட் கணிசெய்து இன்பம் கொண்டோய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளருகின்ற தமிழோடு உன்புகழும் சேர்ந்து
 வாழ்ந்திருக்கும் என்றென்றும் வையந்தன்னில்
பழகுகின்ற கலையாவும் போற்றும் மக்கள்
 பாரதனில் உனைப்போற்றிப் பரவுவாரே!

பொன்றியது உன் உடம்பு எனினும் புகழ்
 பூத்திருக்க வையத்தில் நீ வாழ்கின்றாய்!
என்றும் உந்தன் நினைவெமக்கு இன்பமாகும்:
 ஈழத்தின் கலைமணியே! விபுலானந்தா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37 வீரமாமுனிவர்

அமுதான தமிழிற்கு இனிமையூட்டி
இவ்வினிமை அமுதுடனே அறிவுகூட்டிக்
கமகமென மனம்பரப்பித் தேன்பிலிற்றும்
கவிமலராய்த் "தேம்பா வணியை" யாத்து
இதமாக நூற்கடலுள் மூழ்கி மூழ்கி
இன்முத்தாய்க் காவியங்கள் எமக்களித்துப்
பதமாக நாம்தமிழின் இனிமை துய்க்கப்
பணிசெய்த மாமுனியைப் பரவுவோமே!

சீரான சிலம்பொலிக்கும் குறள்மணக்கும்
செப்பரிய கம்பன்கவி சீர்த்துநிற்கும்:
பேரான புலமைகனிந் தினிமை விஞ்சிப்
பெருக்கெடுக்கும், உன்னரிய கலைப்படைப்பில்
நேரான வசனநடை: தமிழ்ப்புதுமை
நிலைசெய்த தமிழ்அணியே! பெஸ்கிமைந்தா!
ஆராத தமிழமுதை அள்ளி ஈந்தும்
அறவழியும் வளர்த்திட்டாய் அருட்குரவா!

மறையறிவு பெருக தமிழ் மலர்ந்துவீச
மானிலத்தில் அறம் அன்பு தழைத்து ஓங்க:
நிறையறிவு கொண்டுபணி செய்த ஞான
நித்திலமே! சத்தியங்கால் நீள்விளக்கே!
கறைநீக்கிக் கதிகாண மன்பதைகள்
கலைபடைத்த வித்தகனே! மொழிவல்லோனே!
குறைநீக்கி மொழிபுதுக்கிச் செழுமைசெய்த
குருபரனே! தமிழ்ச்சிறப்பே வாழி! வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளம்நிறைந்த காவியங்கள் வசனநூல்கள்
வரலாறு கண்டிட்ட தமிழ்ப்பணிகள்
விளம்பரிய அகராதி, இலக்கணநூல் யாத்த
வித்தகனும் 'இத்தாலி ஈந்த செல்வன்!
உளந்தனிலே உறுதிகொண்ட மறையின் செம்மல்
ஒப்பரிய தமிழ்த்தொண்டன்! உயர்குரவன்!
நலமறிந்து விழா எடுப்போம் நாம் மகிழ்ந்து
ஞாலமெல்லாம் நல்லறிஞன் புகழைப்பாடி:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 38 புலமைச் சக்தி

மாங்குயிலின் இசைமுதலாய் வான்சிறப்பு
வாய்ந்த எழிற்கோலமெல்லாம் அழகுதோயத்
தீந்தமிழிற் பாடிவைத்தான் கவிஞன்: மாந்தர்
திருந்திடவே புரட்சிமழை பொழிந்தகொண்டல்
வேந்தருக்கும் வெறும் புகழ்க்கும் தலைவணங்கா
வீறுநடைப் பீடுடைய கவிதை ஏறு
சாந்துணையும் பொதுநலத்தைப் புதுக்கருத்தைத்
தரணியெங்கும் பரவவிட்ட தகைமையாளன்

"எழுக" என்ருன் பாரதி எழுந்தான் தாசன்
எத்தனையோ கவிதைகளைப் பாடிவைத்தான்:
விழுகின்ற குருடருக்கு ஒளியைக்காட்டி
விளங்குதற்கு நல்லறிவும் புகட்டிவிட்டான்:
தொழுதேற்றிப் பெண்ணினத்தின் பெருமைகூறித்
துன்பமெல்லாம் நீங்கிடவே புதுமைகண்டான்!
எழுகின்ற அறிவினிலே எண்ணந்தன்னில்
எத்தனையோ புரட்சிகளை ஏற்றிவைத்தான்:

புதுமைதரும் உவமை: வீரம் புரட்சிமேவும்
பொங்கியெழுந் தன்மானம் உணர்ச்சி ஓங்கும்:
சிறுமைகண்டு எரிமலையாய் வெடிக்கும்: பின்பு
சீறியெழும்: போர்முழங்கும்: உரிமைகாக்கும்:
வருமிடரை மின்வெட்டில் மாய்க்கும்: இந்த
வையத்தை யாபேர்க்கும் பொதுமையாக்கும்:
சிறுமையுற்ற கதைகள்சொல்லிச் சிரிக்கும்: என்னே!
சீரிளமை கொண்ட சிங்கக் கவிஞன் பாக்கள்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடமைக்கு வேட்டுவைத்தான்: தன்கவியால்
மடிகவென்றான், பிரிவினைகள் சாதிச்சண்டை:
அடிமையுற்ற தமிழரினம் ஆர்த்து எழ
அவர் உணர்வில் புது ஒளியை ஊட்டிவிட்டான்:
கடமையென்றான்: காதல் என்றான்: துணையிழந்த
கன்னியர்க்கும் காதல்மணம் நடத்திவைத்தான்
உடமையென்றான்: பெண்ணினத்திற் குரிமையென்றான்
ஓர்குலத்துக் கொருநீதி ஒளியச்செய்தான்:

“வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும்
தோள்கள் எங்கள் வெற்றித் தோள்கள்:
கங்கையைப்போல் காவிரிபோல் கருத்துக்கள்
ஊறும் உள்ளம் எங்கள் உள்ளம்
வெங்குருதி தனிற்கமிழ்ந்து வீரஞ்செய்கின்ற
தமிழ் எங்கள் மூச்சாம்”
என்றுபல எழுச்சிமிக்கக் கவிமுழங்கி
இதயத்தில் புதுஉணர்வு ஏற்றிவிட்டான்

தீராத காதலினை நெஞ்சில்வைத்துத்
தீய்த்திருக்கும் பெண்ணினத்தை வெளியில்வந்து
நேராகக் காதல்செய்யத் துணிவுஈந்தான்
நீதியென்றான், மனமொத்த காதல்வாழ்வு
சீராக உழைப்பவர்கள் சிந்தும் வியர்வைத்
திறன் வியந்து சிறப்பெல்லாந் தொழிலால் என்றான்
ஆராத இன்பமதை அடையஞாலம்
அறிவுதனைப் பொதுவுடமை யாக்குமென்றான்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தான பல்வரிசை முகத்தைக் காட்டி
முறுவலிக்கும் குழந்தை இன்பம்: கன்னிப்பெண்ணுள்
அத்தானுக்கருகிருந்து அளிக்கும் முத்தம்
அவையாவும் இன்பந்தான்: அதற்குமேலால்
சத்தான தமிழ்இன்பம்: தமிழ் ஈந்த கலைகள் யாவும்
சாலுமின்பம்: என்றாலும் பாரதிதாசன் கவிதைப்
பித்தாகி அதில்மூழ்கித் திளைப்பதே ஓர்
பேரின்பம்: தமிழ் இன்பம்: பெரிய இன்பம்:

"தமிழ் என்றால் அமுது" இன்பம் பொங்கியெழும்
தண்நிலவு, மணம், அழகு, இனிமை, என்று
எழில்கூட்டும் பெயரிட்டான்: அவையொவ்வொன்றும்
எண்ணினால் சிந்தையிலே தேன்பெருகும்
தமிழ் எமக்கு உயிர்: உணர்வு: யாவுமீயும்
தரமான புலவர்க்கு வேலாய் ஆகும்
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான், என்றேற்றித்
தரணியெங்கும் தமிழ்முழக்கம் செய்தசெம்மல்!

பார்திருத்திப் பயிர்விளைத்து உலகம் ஓம்பப்
பணிசெய்யும் பெற்றிஎன்றும் உழவர்மாட்டே - சொல்
ஏர்பிடித்து மனம்திருத்திப் புதுமையூறும்
எத்தனையோ கருத்துக்களை விதைத்து, அவை
சீருடனே மலர்ந்து நறுந்தேன் பிலிற்றச்
செய்கின்ற திறலோனே கவிஞன்: தீமை
வேரறுத்து வரலாற்று ஏட்டைமாற்றும்
விறல் மிகுந்த அவன்புலமைச் சக்திஎன்னே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39 நல்லாசி அருள்வாய் பாலா!

கற்பனை கடந்த அன்பின்
கருணையே வடிவமான
தற்பரன் குமரா! ஞானத்
தவச் செல்வியிடத் துதித்த
அற்புதத் தேவபாலா! அன்பினல்
உலகைக் காத்த
பொற்புறு புனிதா! ஆசி
புல்லர்க்கு ஈகுவாயே!

இன்பத்தைத் தேடித் தேடி
ஏமாந்து துன்பங் காணும்
மன்பதைக்குச் சீவன் ஈந்த
மறையொளி விளக்கே! தேவ
அன்பதைச் சொரியும் ஞான
அழகெழிற் கொழுந்தே! என்றும்
உன்பதம் தஞ்சம் பாலா!
உய்வழி ஈகுவாயே!

மீனினம் மிளிர வானில்
விண்ணவர் துதிசெய்தேற்ற
மானிலம் மகிழ்ந்து போற்றி
வணங்கிட மாயை ஓட
'நான்' என்னும் அகந்தை நீக்கி
நல்லருள் சுரந் தெமக்கு
வானுல களிப்பாய்; தூய
மரியிடம் மலர்ந்த பாலா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40 பாதமலர் தஞ்சம்

அன்புருவே தாய்மரியின் ஆசைக் கனியமுதே
மன்பதைக்காய் வந்துதித்த மாபரனே! -இன்பமேயெம்
விண்ணின் ஒளிவிளக்கே விளங்கும் அருள்வடிவே!
மண்ணின் பெரும் பேறே வாழி!

மூவரசர் தாள்பணிய முத்தர்களின் கானம் எழ
ஆயர்களும் இன்புற்றருகணைய—பூவுலகம்
பொங்கி மகிழ்வெய்தப் புதுமலராய் மரிபயந்த
பங்கயமே பாதமலர் தஞ்சம்!

பொன்னில்லைத் தூபமில்லைப் பூசிக்க மீறையில்லை
எம்முள்ள அன்பதனை ஏற்றருள்வீர்—புன்மையெலாம்
நீக்கிடுவீர் நேசிப்பீர் நித்தியத்தை ஈந்திடுவீர்
நோக்கிடுவீர் கருணையோடு நொய்தாக.

மாமரியாள் சூசை மகிழ்ந்து கரத்தேந்தி
ஆனந்தங்கொண்ட அருட்பாலா—ஞான ஒளி
பொங்குகின்ற தண்மதியே போற்றும் பரம்பொருளே
எங்களுக்கு ஈந்தருள்வாய் ஆசி:

மண்டுகின்ற காரிருளில் மாடுறையும் புற்குகையைக்
கொண்டீரே, மாளிகையாய்க் கோமானே—கொண்ட அன்பால்
நித்திலத்தால் மாடங்களை நீர் வெறுத்து ஏழ்மைபூண்டு
இத்தரையில் வந்தீர் எமைக்காப்பீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 41 அன்னைமரி கண்மணியே!

மாமரியாம் பூங்கொடியில் மலர்ந்த எழில் மலரே!
ஞாலமெலாம் போற்றுகின்ற நற்குருவே கண்வளராய்!

மன்னுயிர்க்கு வாழ்வு வழங்கவந்த பாலகனே!
கண்ணே! அருள்காலும் கதிரொளியே கண்ணுறங்கு!

வாட்டும் பனிக்குளிரில் வருந்த மலர்மேனி: வானோர்
கூட்டம் தொழுதேற்றக் கோமளமே வந்துதித்தாய்!

பொல்லாப் பவம் அகற்றப் பூவில் மனுவான
செல்வக் குமரா! தேவமைந்தா! நீயுறங்கு:

ஆவின் சிறுகுடிலில் ஆண்டவனே நீர் பிறந்தீர்!
பாவில் உமை ஏற்றிப் பாடுகிறார் வானோர்கள்!

பஞ்சணையுமில்லைப் பாலனுக்கோ தொட்டிலில்லை!
கொஞ்சி விளையாட மக்கள் கூட்டமில்லைக் கோமகனே!

சத்திரத்தில் இடமின்றித் தயங்க மரி, சூசை: தேவ
புத்திரனே! இக்குகைதான் போதுமென கொண்டீரோ!

சாந்தம் தவழச் சமாதானம் மலர்ந்தொளிர
மாந்தர் மகிழ மண்ணுலகில் நீ பிறந்தாய்!

அன்புருவே; பாலகனே! அன்னைமரி கண்மணியே!
ஆராரோ தேவ பாலா! அருள்வடிவே கண்வளராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42 கருணை நாதா !

மானிடர் பவம்தீர்க்க மனிதனாய் வந்திட்ட
வகைதனைக் கூறுவேனோ !
மன்பதைக்காயுயிர் வழங்க நீரடைந்திட்ட
வாதைதனைக் கூறுவேனோ !
ஏனென்று கேட்பார்கள் இல்லாத ஏழையாய்
எண்ணியே உமைக் கொடியோர்
எள்ளிநகையாடியும் தள்ளியுமை வீழ்த்தியும்
இகழ்ந்ததைக் கூறுவேனோ !
ஊனின்று குருதி பீறிட்டோட உடல் சோர
ஒரு பிழையும் அறியா உம்மை
ஓங்கியே அடித்திட்ட கொடுமைநிறைவன் செயலை
ஒவ்வொன்றாய்க் கூறுவேனோ !
கான்செறி கொடுமுள்ளைச் சிரசினில் அழுத்தியே
கையதனில் தடி கொடுத்து
கர்த்தாவே ! கன்நெஞ்சர் செய்திட்ட ஆகடியம்
கணக்கினில் அடங்குமாமோ ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோளிற் சிலுவையின் கொடும்பாரம் தாங்காது
துடித்ததின் கீழ் வீழ்ந்தீர்!
துட்டர்கள் இம்சிக்கச் செம்மறிப்புருவையாய்த்
தொடர்ந்தீர் கல்வாரி மலைக்கு:
தாளில் கரங்களில் இரும்பாணி அறைந்தருமைத்
தற்பரா! தொங்கவிட்டார்:
தசைபிரிய ஐயகோ! உயிர்பிரியப் பார்த்து அன்புத்
தாய் மரி கூவியழுதாள்:
நீளுமுலகினில் நடந்த மாறுதல் யாவும்
நீர் தேவன், எனக்காட்டின:
நீசர்கள் இரட்சகா! நின்வல்லமை கண்டு
நெஞ்சம் பதைபதைத்தார்!
தாழும் மனுக்குலம் உய்வெய்த நின்னுயிரைத்
தந்திட்டீர் அன்பினுருவே!
தஞ்சமென்றண்டினோம்: நின்பாதம் பாவிகள்
தயைபுரிவீர் கருணை நாதா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43 உலகுக்குயிர் ஈந்தோய் !

மன்னுயிரை மீட்க மனுவாகி வந்த அன்பே!
உம்முயிரை ஈந்தீர்! உலகம் ஈடேறுதற்காய்!
இன்முகத்தோடேற்றீர்; ஈனர்செய் கொடுமையெலாம்
உம்மை வதைத்தோர்க்கும் உருகியே நீர் கனிந்தீர்!

காறி உமிழ்ந்தார்: கயவர் உமைக் கேலிசெய்தார்:
சீறிச்சினந்தார்: திருமேனி நைந்து இரத்தம்
பீறிப் பெருக பெலன்குன்றி நீர் வருந்த
மாறி அடித்தார்: வாதை ஏற்றீர் மானிடர்க்காய்!

முள்ளைச் சிரசழுத்தி முறிந்ததடி கைக்கொடுத்து
எள்ளிநகைத்தார் "இவரே அரசன்" என்றார்:
"கள்ளன்" என்றார் பொய்யர் கடியசிலுவை சுமத்தித்
தள்ள நடந்தீர்: தரையில் அதன்கீழ் விழுந்தீர்!

வீணர் உமைச் சிலுவைமீதில் கிடத்தி இரும்
பாணி அறைந்தார்: ஐயோ பெருங் கொடுமை!
காண மனம்பதைக்கும்: கர்த்தாவே அன்பு உரு
ஆன பரம்பொருளே! அவனிதனை மீட்டவரே!

"தாகம்! தாகம்!" என்று தற்பரா நீ அலறக்
கோப உருக்கொண்ட வஞ்சர் கொடுத்தார் பிச்சுக்காடி
தாகம் அறிவாரோ! சற்றுமிரக்கமில்லார்:
பாவம் நிறைந்தவர்கள்! பண்ணினரே ஆகடியம்:

ஆவிதுடிக்க அங்கமெலாம் செந்நீர் பெருகக்
கூவிக் குரலெடுத்துக் கொடுமைகண்டு அன்னையழ
தாவி யணைக்க ஒரு தஞ்சமின்றிச் சிலுவைற்றொங்கி
பாவிகட்காய் மரித்தீர் பரனின் திருக்குமரா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 44 உயிர்த்தெழுந்தார்!

தெய்வீக வல்லமையின் பிரபை காலச்
செகமெல்லாம் ஆனந்தக்கடலில் மூழ்க;
மெய்யன்பர் தோத்தரிக்க: விளங்க நீதி
விரியஒளி, வீரரெல்லாம் மயங்கி வீழ:
பொய்யகலப் புண்ணியர்கள் புகழ்ந்து பாடப்
பூவில் மரி மனங்குளிரப் புதுமைகாண
அய்யன் எங்கள் அன்பின் உரு உயிர்த்தெழுந்தார்!
அடைபட்ட மோட்சமதை அடியார்க்கீந்தார்!

"இடித்திடுங்கள் ஆலயத்தை மூன்றேநாளில்
எழுப்பிடுவேன்" என்றுர் நம்யேசு பூவில்:
முடித்துவிட்டார்: தம்முரையைச் செயலில் செய்து
மூவுலகும் புகழ்ந்தேற்றும் முதல்வன் யேசு!
அடித்து அவர் உரைமறுத்த அற்பரெல்லாம்
அறிவிழந்தார்! ஆண்டவனின் ஆற்றல்முன்னே!
துடித்து எழ அக்களிப்பால் தூயர் ஆன்மா
துலங்க அருள்; தொடர இன்பம் உயிர்த்தார் நாதன்:

மண்ணுலகம் ஈடேற்ற வந்தார் யேசு
மாண்டு ஒரு மூன்றும்நாள் உயிர்த்தெழுந்தார்:
கண்ணிழந்த மக்களுக்குக் கதியை ஈந்தார்!
கடவுள்: அவர் அன்பினுக்குக் கரைதான் உண்டோ?
எண்ணி அவர் வல்லமையை ஏற்ற வானோர்
இன்பமெல்லாம் பொங்க, துயர் இரிந்து ஓட
விண்ணும் மண்ணும் பரனுட்சி வீற்றிருக்க
விளங்கஒளி; பூவில் பரன் உயிர்த்தெழுந்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

பொங்கிச் சுடர்வீசத் தெய்வீக வல்லமை
பூவிலோர் மகிழ்ந்து ஆர்ப்ப:
புதுமை கண்டறற்பர்கள் புறங்காட்டி ஓடியே
புத்தி தடுமாறி வீழ:
எங்கணும் தேவனின் புகழ் பரந்துசென்று
இகபரம் தாவி ஓங்க
இருள்மாயை மறையவே அருள்பிரபைகாலவே
யேசு உயிர்த்தெழுந்தார்!
மங்களம் எனப்பாடி வானோர்கள் துதிசெய்ய
மானிடரும் சேர்ந்துபாட
வாதைசெய்த யூதர்குழாம் வலுவிழந்து நாணிஅவர்
வல்லமை கண்டு வியக்க:
அங்கிங்கெனுதபடி எங்கும்நிறை சோதியாய்
அமலன் உதயமானர்!
அடியவர்க்கு வானுலகு அளித்திட்ட அன்புருவை
அகமகிழ்ந் தேற்றுவோமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 மரியே வாழ்க

அந்திமலர் அழகுநிலா பாதந்தாங்கி
ஆதவனை எழில் உடையாய் அணிந்து, ஒளி
சிந்துகின்ற உடுக்குலத்தைச் சிரசில் பூண்டு
திருக்கரத்தில் செபமாலை ஏந்தி: அருள்
தந்துலகு வாழ்விக்கும் முகிலாய், என்றும்
சரணடைந்தோர் கருணைபெறும் வழியுமாகி
வந்துதித்த தூய்மைநிறை மரியே! தாயே!
வல்லசுதன் தெரிந்துகொண்ட மாதா வாழி!

சொற்கடந்த சுந்தரியே! சுதனையீந்தெம்
துயர்களைந்த தயாபரியே! கிருபை ஊற்றே!
கற்புநிறை பெட்டகமே! ஆன்மஜோதி
காலுகின்ற நற்பொறையே! மோட்ச வாழ்வே!
அற்புதனைத் திருக்கரத்தால் அணைக்கும் பேறே!
அன்பு சுரந்தெமைக்காக்கும் அருட்சுனையே!
கற்பனைக்கு மெட்டாத கன்னிமை யே!
கடிமலர் கொள் அருள்வளனின் துணையேவாழி!

வானோரின் பொலிவான மாட்சி பெற்று
வரங்களெல்லாம் பொழிகின்ற அருள்மழையே!
ஞானநிறை கதிர்வீசும் மணிச்சரமே!
நம்பியவர் பெருந்துணையே! நல்விளக்கே!
ஈனோர்க்காய் இரங்குகின்ற தாய்மைக்குன்றே!
இகபரத்தின் இராக்கினியே! மாசில்லாத
வானுலக வழி ஒளியே! வரப்பிரசாதம்
வாய்ந்த நல்ல தாய் மரியே வாழி! வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 46 தாவீது குலக்கொழுந்தே!

தேன்சுரக்கும் நறுமலரைக் கரத்தில் ஏந்தித்
திருச்சுதனின், தாய்மரியின் துணையாய்வந்தோய்!
வான்சுரக்கும் நல்லறங்கள் வளமாய்ப்பூண்டு
வற்ருது அருள்சுரக்கும் தவத்தின் குன்றே!
ஊன்சுமந்து மானிடர்க்காய் உயிரை ஈந்த
உத்தமனை இரட்சகரை வளர்த்த தாதாய்!
கோன்குலமாம் தாவீது குலக்கொழுந்தே!
குவலயத்தோர்க் கருள்புரியும் வளனே வாழி!

புண்ணியத்தின் பொறையாகிப் பூவில்வந்து
பொறுமையதாய் ஈரறமும் சிறக்க வாழ்ந்தோய்!
மண்ணுலகின் புரையகற்ற வந்த தேவ
மைந்தனையும் திருக்கரத்தில் மகிழ்வாய் ஏந்திக்
கண்ணெனவே கற்பதனைக் காத்த கோவே!
கடிமலரே! திருச்சபையின் காவலனே!
விண்ணுலக மாட்சியெல்லாம் பெற்றுவேத
வித்தகனுய் விளங்குகின்ற விறலோன் வாழி!

மானிடர்க்குள் பெருவரங்கள் பெற்று: தேவ
வல்லமையால் வானேர்க்குள் உயர்வடைந்து
ஞானம்நிறை நலன்களெல்லாம் பொழிமுகிலாய்
நம்பியவர் அடைக்கலமாய் விளங்கும் தாதா!
கான்மலரின் தூயஉள்ளம் துயரால் வாடக்
கைவருந்தத் தொழில்புரிந்தீர்: குடும்பம் காத்தீர்!
மானிலத்தில் வறுமையெலாங் கண்டும்: நேச
மைந்தனுக்காய் வாழ்ந்திறந்த வளனே வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பினுக்குப் பொருளாகிக் காவலாகிக்
கன்னிமரி துயர்களைந்த கடமைவீரா!
அற்புதனே! ஆண்டவன்மார் பணிகலனே!
அன்னைமைந்தன் தம்கரத்தால் அணைத்துநிற்க
இப்புவியில் உயிர்நீத்தாய் எம்மைக் காப்பாய்!
இவ்வுலக வாழ்வழிய மோட்சம் சேர்ப்பீர்!
தற்பரனின் திருவுளத்தைப் பணிவாய் ஏற்றோய்!
தாழ்மை அன்பு நிறைந்தவரே தருவீர் ஆசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 47 பாப்பு வாழ்க!

MICROFILM
Positive
Negative 1
Reel No. 1/0
Date; 4/11

கத்தனின் இடமாய் நின்று
கருணையும் அன்பும் தந்து
நித்திய வழியைக் காட்டும்
நிகரில்லா மறைவிளக்கே!
சத்தியந் தவறு ஞானத்
தாதாவே! பொறையின் ஊற்றே!
முத்தியின் சுடரே வாழ்க!
மூவுலகரசா வாழி!

சாந்தமும் அறிவும், சமா
தானமும் கான்று நித்தம்
வேந்தர்க்கும் வேந்தாய், என்றும்
விளங்கிடும் மேய்ப்பா! மாந்தர்
நீந்திடப் பாவக் கடலை
நிலையில்லா இன்பம் நீக்கி
ஆம்துணை ஈந்து ஞாலம்
அழிவின்றிக் காப்போய் வாழி

அழிவுசெய் நாத்திகப் பேய்
அலறிடும் நின் உரையால்
ஒளிசெய்யும் அறத்தின் மாட்சி
ஓங்கிடும் நித்தம் நித்தம்:
பழிபாவம் நடுங்கும்: மாயை
பதைத்திடும் நின் ஆட்சியில்:
களிகொள்ளும் உலகம் நாளும்
கடவுளின் பாதம் போற்றி:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமறை மலர்ந்து வாசம்
திக்கெட்டும் பரவி வீச
அமலனை உலகுக் கீந்து
அவர்வழி உலகு நாட
அறவழி நின்று சேவை
ஆற்றுவாய்: அறிவுகொண்டு:
நிறையருள் பொலிவு பெற்றோய்!
நெடிது நாள் இனிதே வாழி!

UNIVERSITY OF CEYLON
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MICROFILMED
Positive
Negative 1
Reel No. 1/063
Date 4/11/91

## 48 தாய்மை

அன்பு பெய்தளிக்கின்ற தாய்மைக் கோலம்
ஆன்மாவின் தூய்மை காலும் விழிகள்:
இன்பஒளி சுரக்கின்ற எழில் வதனம்
இறைவன்தாள் சேர்க்கின்ற அருட்கரங்கள்:
துன்பமெல்லாம் போக்குகின்ற தூயவார்த்தை
தொல்லுலகைக் காக்கின்ற நல்ல எண்ணம்:
மன்பதைக்காய் இரங்குகின்ற மனித உள்ளம்
வாய்ந்த ஒருதாய் தன்னை உலகில் கண்டேன்:

தூய்மைநிறை எழில்வடிவாள் உருவம்கண்டு
துன்பமெல்லாம் மறந்திட்டேன்: எனை மறந்தேன்:
சேய்மையிலே சென்று அவள் வதனம் பார்த்தேன்:
திருமுகத்தில் வாட்டம் இழை யோடக் கண்டேன்:
"வாய்மையுள்ளதாயே! உன் அருள் வதனம்
வாடிடவே காரணந்தான் ஏது?" என்றேன்:
"தீமையிலே என்மக்கள் தீய்தல் கண்டு
சிந்தைநொந்து வாடுகிறேன்" என்ருள் பெண்ணுள்

"அறிவிருந்தும் தீமைகளை அறிந்த பின்பும்
ஆண்டவனின் கருணைதனை அடைந்தும் பூவில்
சிறுமையிலே மாண்டழியும் சேயோர்க்காகச்
சிந்துகின்றேன் கண்ணீரை" என்றுரைத்தாள்!
"பெருமைநிறை தாயே! நீ யார் சொல்லம்மா!
பிறர்வாழ்வு விழைவதோ உன்மகிழ்வு" என்றேன்
திருவதனம் மலரஅவள் விளம்பி நின்ருள்
திருச்சபைத்தாய் என்றறிந்தேன் சிந்தைநொந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Class No..................

Acc. No..................

This book is returnable on or before the last date stamped below.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

275524

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org